இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 147 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 21 – சனிக்கிழமை 06 ஜனவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 147 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 21 - Saturday 06 January 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## தமிழர் திருநாளை சிறப்பாகக் கொண்டாட

# பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 6-

**“தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும்” - என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

தமிழர்களின் அடையாளமாக அனைத்துத் தரப்பு மக்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் பெருமைமிகு ஒரு பண்டிகை பொங்கல் திருநாளாகும். இந்த நன்னாள் அனைத்துத் தொழில்களுக்கும், ஏன், மனித குலத்திற்கே அடித்தளமாய் விளங்கி, உணவளித்து வரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாகவும் தமிழர்களாகிய அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நன்னாளை முன்னிட்டு, 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும் என்று கடந்த 2.1.2024 அன்று தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

### இலவச வேட்டி சேலைகள்

மேலும், முன்கூட்டியே திட்டமிட்டு உற்பத்தி செய்த காரணத்தினால், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டிசேலைகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து, இவற்றை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், பொங்கல் திருநாளைச் சிறப்பாக மக்கள் கொண்டாட, ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து, **ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1,000 ரூபாய் பொங்கல் பரிசாக நியாயவிலைக் கடைகளில் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக ரொக்கமாக வழங்கப்படும்** என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மகளிர் உரிமைத் தொகை

மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி வழங்கப்பட்டு வரும் **கலைஞர் மகளிர் உரிமைத் தொகையினை, இந்த மாதம் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக, அதாவது, வரும் 10 ஆம் தேதியன்றே, மகளிர் உரிமைத் தொகை பெற்றுவரும் 1 கோடியே 15 இலட்சம் மகளிரின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும்** என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவிலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் 258 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவிலும், பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 78 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலும் முடிவுற்ற திட்டப் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் 278 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 2 புதிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### சென்னையில் 7, 8 தேதிகளில் ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்!

### தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை!
### ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்பு!

சென்னை, ஜன.6 -

**சென்னையில் நாளையும் - நாளை மறுநாளும் ( 7 மற்றும் 8ஆம் தேதிகளில்) நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 7 மற்றும் 8ம் தேதிகளில் உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

அதன்படி, வரும் 7ஆம் தேதி காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாநாடு தொடங்குகிறது. தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை ஆற்றுகிறார். அதன்பின், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

ஒன்றிய தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் தொழில்கள் அடிப்படையிலான பல்வேறு தனித்தனி அமர்வுகள் நடத்தப்படுகின்றன. ஜவுளி, காலணி தொழில்கள், மின்சார வாகனங்கள், வேளாண் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு அமர்வுகள் 2 நாட்களும் நடத்தப்பட உள்ளன.

உலக முதலீட்டாளர் மாநாட்டின் தொடக்க விழாவை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஒளிபரப்ப மாவட்ட ஆட்சியர்கள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் இரண்டாம் நாளான ஜனவரி 8ஆம் தேதி பல்வேறு நாடுகளின் தொழில்நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளன.

சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி மையம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து அன்று மாலை 4.30 மணிக்கு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஆற்றுகிறார்.

---

### நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு

## மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறது!

### நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றச்சாட்டு!

சென்னை, ஜன. 6-

**நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுவதாக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றம் சாட்டியுள்ளார்.**



சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தங்கம் தென்னரசு, நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் உண்மைக்குப் புறம்பான தகவல்களை அளிப்பதாக தெரிவித்தார்.

2 பேரிடர்களை சந்தித்துள்ள தமிழ்நாட்டிற்கு, ஒன்றிய அரசு எந்த உதவியும் செய்யவில்லை என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசுதான் நிவாரண உதவிகளை வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

பிற மாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டிற்கு மிகக் குறைவான நிதியைதான் ஒன்றிய அரசு பகிர்வதாக குற்றம் சாட்டினார். தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் நிதியில் 29 சதவிகித தொகையை மட்டுமே ஒன்றிய அரசு திருப்பி அளிப்பதாகவும் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு பாரபட்சம் என்றும் தமிழ்நாட்டிற்கு வரி பகிர்வு மிக குறைவாகவே உள்ளது என்றும் குறிப்பிட்ட அவர், மக்கள்தொகை அடிப்படையிலும் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நியாயமான நிதியை வழங்கவில்லை என்று தெரிவித்தார்.

தொடர்ந்து மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் ஒன்றிய அரசு உரிய நிதி ஒதுக்கவில்லை என்பதை புள்ளி விவரங்களுடன் குறிப்பிட்ட நிதி அமைச்சர் வெள்ள பாதிப்புக்கு ஒன்றிய அரசு உடனடியாக நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

---

### அடிடாஸ் நிறுவனத்தின்

## உலகளாவிய திறன் மேம்பாட்டு மையம்!

### சென்னையில் அமைகிறது!

சென்னை, ஜன. 6-


பிரசித்தி பெற்ற அடிடாஸ் நிறுவனம் தனது உலகளாவிய திறன் மேம்பாட்டு மையத்தை தமிழ்நாட்டில் அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அடிடாஸ் நிறுவனம், ஆடை, காலணி உள்ளிட்டவற்றை தயாரித்து உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்த நிறுவனத்தின் தலைமையகம் பவேரியாவில் உள்ளது.

இந்நிலையில், அடிடாஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தனது நிறுவனத்தின் உலகளாவிய திறன் மேம்பாட்டு மையத்தை தமிழ்நாட்டில் அமைக்க உள்ளதாகவும், சீனாவுக்கு வெளியே ஆசியாவில் அமையும் முதல் மையம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் அமையும் இந்த மையத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக அனில் கபூர் நியமிக்கப்படுவதாகவும் அடிடாஸ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்ச்சுக்கல், சீனா, கொலம்பியா மற்றும் வட அமெரிக்கா நாடுகளில் உள்ள தனது உற்பத்தி, கொள்முதல், விற்பனை உள்ளிட்ட நடவடிக்கைகளை சென்னையில் அமைய உள்ள உலகளாவிய திறன் மேம்பாட்டு மையம் கையாளும் என்றும் அடிடாஸ் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சிறப்பான மனிதவளம், மென்பொருள் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பல பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதன் அடையாளமாகவே அடிடாஸ் நிறுவனத்தின் அறிவிப்பு கருதப்படுகிறது.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 06-01-2024

# வளர்ச்சியின் வடிவம் கிளாம்பாக்கம்

வளர்ச்சியின் வடிவமாக இருக்கும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தின்மீது அவதூறு பரப்பி தனது வக்ர அரசியலை வெளிப்படுத்தி இருக்கிறார் ஒன்றிய அமைச்சர் எல்.முருகன்.

**அழகானதும் - ஆக்கபூர்வமானதும் - பிரமாண்டமானதும் - பிரமிக்க வைக்கத் தக்கதுமான கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தைப் பார்த்து பொதுமக்கள் அனைவரும் மலைத்துப் போய் நிற்கிறார்கள். சென்னையில் பன்னோக்கு மருத்துவமனையையும், மதுரையில் மாபெரும் நூலகத்தையும் அமைத்த மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் அமைத்துள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், காலாகாலத்துக்கும் கோடிக்கணக்கான மக்களுக்குப் பயனளிக்கும் பேருந்து நிலையமாக அமையப் போகிறது; பொதுமக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

சென்னை பாரிமுனையில் நெரிசல் மிகுந்த பகுதியில் இருந்த பேருந்து நிலையத்தை மாற்றி - கோயம்பேட்டில் மாபெரும் பேருந்து நிலையம் அமைக்கத் திட்டமிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இதனையே மாதிரியாகக் கொண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை உருவாக்கத் திட்டமிட்டார்கள். ஆனாலும் வேகமாக பணிகளைச் செய்யவுமில்லை, முழுமையான நிதியை ஒதுக்கவுமில்லை.

**கழக ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகுதான் முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகளை விரைவுபடுத்தினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவரான பி.கே.சேகர்பாபு, இதனை தனிக் கவனம் செலுத்தி உருவாக்கிக் காட்டி இருக்கிறார்.**

393.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பில் கிளாம்பாக்கத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' அமைக்கப்பட்டுள்ளது. இதில் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளியூர் செல்ல வசதியாக 215 பேருந்துகளை ஒரே நேரத்தில் நிறுத்தலாம். இரு சக்கர, நான்கு சக்கர பேருந்து நிலையம் அமைக்க இரண்டடுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேருந்து முனையத்தில் நகரும் படிக்கட்டுகள், மின் தூக்கிகள் உள்ளன. நாள்தோறும் சுத்தம் செய்ய இயந்திரத் துடைப்பான்கள் உள்ளன. குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. உணவகங்கள், மருத்துவமனை, இலவச மருத்துவ மையங்கள், கழிவறைகள், குழந்தைகளுக்குப் பாலூட்டிட அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் பயணச் சீட்டு வாங்க குறைந்தளவு உயரம் கொண்ட பயணச் சீட்டு பெறுமிடங்கள் இருக்கின்றன. அவர்களுக்காக சக்கர நாற்காலிகள், தனிக் கழிவறைகள் இருக்கின்றன. திருநங்கையர்க்கு தனி கழிவறை வசதி உள்ளது. பயணிகள் தங்குவதற்காக ஓய்வறைகள் இருக்கின்றன. 100 ஆண்கள், 40 பெண்கள், 340 ஓட்டுநர்கள் தங்க ஓய்வறைகள் உள்ளன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் உள்ளேயே உள்ளது.

சென்னைக்குள் இருந்து கிளாம்பாக்கம் வர உள்ளூர் பேருந்துகளை நிறுத்த 7 ஏக்கர் பரப்பளவில் 60 பேருந்துகளை நிறுத்தும் வசதியுடன் மாநகரப் பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே வந்து இறங்கி, வெளியூர் பேருந்துகளைப் பிடிக்க பயணிகள் செல்வதற்காக சுரங்கப் பாதையுடன் கூடிய மின் தூக்கி சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. பேருந்துநிலையம் அருகே ரயில் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 16 ஏக்கர் பரப்பில் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. பேருந்து நிலையத்தில் இருந்து 7 கி.மீட்டர் தூரத்தில் புதிய ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு வசதிகளோடுதான் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைத் திறந்து வைத்துள்ளார்.

**பரந்து விரிந்துவரும் சென்னையின் வசதிக்கு ஏற்ப இது அமைக்கப்பட்டுள்ளது. தலைநகரை நோக்கி வரும் தமிழ்நாட்டு மக்களின் தேவைக்கு ஏற்ப இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தைப் பார்த்தவர்கள் பாராட்டி வருகிறார்கள். பயன்படுத்தியவர்கள் போற்றி வருகிறார்கள். இதுதான் ஒன்றிய அமைச்சர் முருகனுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது.**

**2015ஆம் ஆண்டு முதல் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை என்று சொல்லி, வாயால் வடை சுட்டு வரும் கூட்டத்துக்கு மருத்துவமனையை, நூலகத்தை, பேருந்து நிலையத்தை மூன்றாண்டு காலத்துக்குள் மளமளவென எழுப்பும் முதலமைச்சரைப் பார்த்தால் பொறாமை வரத்தானே செய்யும்? அதனைத்தான் அறிக்கையாக விடுத்துள்ளார், ஒன்றிய அமைச்சர் முருகன்.**

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டதுதான் இந்தப் பேருந்து நிலையம் என்பதை தி.மு.க. அரசு மறைக்கவில்லை. 'நாங்கள்தான் திட்டமிட்டோம்' என்று சொல்லிக் கொள்ளவும் இல்லை. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் 90 சதவிகிதப் பணிகள் முடிந்து விட்டதாக ஒன்றிய அமைச்சர் முருகன் சொல்வது, பச்சைப் பொய் ஆகும். 2013 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி திட்டமிட்டது. 2021ஆம் ஆண்டு அந்தக் கட்சியின் ஆட்சி முடிந்தது. 9 ஆண்டுகளாக என்ன செய்தார்கள்? 2013ஆம் ஆண்டு அறிவித்த அ.தி.மு.க. அரசு, 2018ஆம் ஆண்டு தான் ஒப்பந்தம் கோரியது. 2019ஆம் ஆண்டுதான் பணிகளைத் துவக்கியது. 2021 தி.மு.க. ஆட்சிக்கு வரும் வரை 30 விழுக்காடு பணிகள்தான் முடிந்திருந்தன. அமைச்சர் முருகன் சொன்னதைப் போல, 90 விழுக்காடு பணிகள் முடிந்திருந்தால் அன்றைய முதலமைச்சர் பழனிசாமியே திறந்து வைத்திருப்பாரே!

கழிவறைக் கூடத்திலும், சுடுகாட்டுக்குள்ளும் அம்மா மருத்துவ மனையை அவசர கதியில் திறந்து கணக்குக் காட்டியவராச்சே பழனிசாமி. அவரா 90 விழுக்காடு முடிந்த பேருந்து நிலையத்தை விட்டு வைப்பார்?

**'நாடாளுமன்றத் தேர்தலுக்காக உடனடியாகத் திறந்து விட்டார்கள்' என்கிறார் அமைச்சர். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக மதுரையில் ஒரு செங்கலை வைத்துவிட்டுப் போனார் பிரதமர் நரேந்திர மோடி. 2024 தேர்தல் வரப் போகிறது. செங்கல் களிமண்ணாச்சே தவிர, கட்டடம் ஆகவில்லை என்பதை மதுரைக்குப் போய் மாண்புமிகு முருகன் பார்க்க வேண்டும். "வெறும், 'பாரத் மாதாகீ ஜே'வை வைத்து நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்ய முடியாது" என்பதை முருகன்கள் உணர வேண்டும்.**

●●

நாடாளுமன்றத் தேர்தல்:


## தமிழ்நாட்டில் ஏற்பாடுகள்!

புதுடெல்லி, ஜன. 6 –

தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து வருகிற 9 மற்றும் 10 ந் தேதிகளில் ஆலோசனை கூட்டங்களை நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது

தற்போதைய மக்களவையின் பதவிகாலம் மே மாதத்துடன் நிறைவடைகிறது. இதையடுத்து மக்களவைக்கு தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. முதல் கட்டமாக ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் ஆலோசனை நடத்த தலைமை தேர்தல் ஆணையர் முடிவு செய்துள்ளார். தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர்கள் அனுப்சந்திர பாண்டே, அருண் கோயல் ஆகியோர் ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் ஆந்திர மாநிலத்தில் ஆலோசனை கூட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து தமிழ்நாட்டில் 9 மற்றும் 10 தேதிகளில் ஆலோசனை நடத்த இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (04.01.2024) பிரதமர் நரேந்திர மோடி அவர்களை அவரது இல்லத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து உரையாடினார். அப்போது தமிழ்நாட்டில் ஜனவரி 19 முதல் 31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள 'கேலோ இந்தியா' இளைஞர் விளையாட்டு போட்டி 2023 க்கான துவக்க விழாவுக்கு அழைப்பு விடுத்தும், தமிழ்நாட்டின் வெள்ள நிவாரண நிதியை உடனடியாக வழங்கக் கோரியும் வலியுறுத்தினார்.

புதுடெல்லியில்

# பிரதமர் மோடியை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்தார்!

## "கேலோ இந்தியா" தொடக்க விழாவில் பங்கேற்க அழைப்பு!

**புதுடெல்லி, ஜன.6-**

**டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடி அவர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) மாலை சந்தித்து 'கேலோ இந்தியா' போட்டிக்கான அழைப்பிதழை வழங்கினார்.**

'கேலோ இந்தியா' விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நான்கு நகரங்களில் 'கேலோ இந்தியா' போட்டிகள் நடைபெற உள்ளது. வருகிற 19-ஆம் தேதி தொடங்கும் 'கேலோ இந்தியா' போட்டிகள் 31-ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (04.01.2024) பிரதமர் நரேந்திர மோடி அவர்களை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் ஜனவரி 19 முதல் 31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள "கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டி –2023"க்கான துவக்க விழா அழைப்பிதழை வழங்கினார்.

### பிரதமரின் இல்லத்தில் சந்திப்பு!

இந்நிலையில் பிரதமர் மோடி அவர்களை டெல்லி சென்ற தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சந்தித்தார். பிரதமர் மோடியின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அப்போது 'கேலோ இந்தியா' போட்டிக்கான அழைப்பிதழை பிரதமர் மோடி அவர்களிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

### பேரிடர் நிவாரண நிதியை வழங்கக் கோரிக்கை!

'கேலோ இந்தியா' போட்டியின் தொடக்க விழாவில் பங்கேற்குமாறு பிரதமர் மோடி அவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

புதுடெல்லியில் பிரதமருடனான சந்திப்புகுறித்தும்கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023 குறித்தும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது 'எக்ஸ்' சமூக வலைதளப் பக்கத்தில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 19, 2024 அன்று சென்னையில் நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை அழைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### தேவையான நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதி!

புதுடெல்லியில் முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விரிவான நிவாரணம், மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள தேசிய பேரிடர் நிவாரண நிதியை உடனடியாக வழங்குமாறு பிரதமரிடம் தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளேன்.

தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்தார்.

மேலும், தமிழ்நாட்டின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்தும், குறிப்பாக தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையின் பன்முக வளர்ச்சி குறித்து பிரதமருடன் கலந்துரையாடினேன்.

இந்தச் சந்திப்பின்போது, 2023-ஆம் ஆண்டுக்கான சி.எம். கேடயம் விளையாட்டு மற்றும் தமிழ்நாடு நடத்திய ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்பை வெற்றிகரமாக நடத்தியதைக் காட்டும் (காபி டேபிள்) புத்தகத்தையும் பிரதமரிடம் வழங்கினேன்.

கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023, விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டின் பெருமைமிக்க அமைப்பு திறன் மற்றும் புகழ்பெற்ற வரலாற்றை நிரூபிக்க மற்றொரு நம்பிக்கைக்குரிய வாய்ப்பாக இருக்கும்.

இவ்வாறு தனது சமூக வலைதளப் பக்கத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ராகுல் காந்தியுடன் சந்திப்பு!

டெல்லியில் பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பின்னர் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் சந்தித்துப் பேசினார்.







விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் 6.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆரணி எம்.பி. டாக்டர் விஷ்ணு பிரசாத், பேரூராட்சிகளின் இயக்குனர் கிரண் குரலா, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## ரூ.278.97 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் - 121 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

# நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.1933 கோடியில் திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 121 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன. 6–

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.1933.69 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.278.97 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப் படவுள்ள 2 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 121 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவிலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் 258 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவிலும், பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 78 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலும் முடிவுற்ற திட்டப் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் 278 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 2 புதிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் 121 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ரூ.1335.86 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்!**

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 759 ஊரக குடியிருப்புகளுக்கு 182 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியத்தைச் சார்ந்த நல்லாத்தூர், என்.என். கண்டிகை மற்றும் பூனிமாங்காடு ஊராட்சிகளில் உள்ள நல்லாத்தூர் மற்றும் 15 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த 134 ஊரக குடியிருப்புகளுக்கு 91 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக்குடிநீர் திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரக குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர் மற்றும் வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கு 117 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 756 ஊரக குடியிருப்புகளுக்கு 440 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டு குடிநீர் திட்டம்;

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரக குடியிருப்புகளுக்கு 412 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரக குடியிருப்புகளுக்கு 87 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளிப்பத்து ஊராட்சியில் உள்ள 4 ஊரக குடியிருப்புகளுக்கு 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டம்;

என மொத்தம் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 9.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் ரூ.204.36 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்!**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கத்தை சார்ந்த இந்திரா நகர், மேக்ரோ மார்வெல், சஹ்ராஜ் என்கிளேவ், சேது லட்சுமி நகர், சத்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 3.33 மில்லியன் லிட்டர் கழிவு நீர் வெளியேற்றும் வகையில் 22 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான பாதாளச் சாக்கடை திட்டம்;

மாதவரத்தைச் சார்ந்த லட்சுமிபுரம், மாதவரம் பூஸ்டர், மாதவரம் பேருந்து நிலையம், கூட்டுறவு நகர் ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 27 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கிடும் வகையில் 44 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்;

நெற்குன்றம் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், கங்கையம்மன் கோயில் தெரு பகுதிக்கு நாளொன்றுக்கு 3.1 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றும் வகையில் 26 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான பாதாள சாக்கடைத் திட்டம்;

நெற்குன்றத்தை சேர்ந்த ஏ.வி.கே. நகர் மற்றும் ஸ்ரீ லட்சுமி நகர் பகுதிகளுக்கு 11 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்;

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கண்ணன் காலனியில் நாளொன்றுக்கு 5 மில்லியன் லிட்டர் கழிவு நீர் வெளியேற்றும் வகையில் 10 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 MLD திறன் கொண்ட கழிவுநீரகற்று நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்;

அண்ணாநகர் மண்டலம், வில்லிவாக்கம் 'B' கழிவுநீர் உந்துநிலையம் முதல் வில்லிவாக்கம் தடாகம் கழிவுநீர் உந்துநிலையம் வரை உள்ள 300 மி.மீ. விட்டமுள்ள வார்ப்பிரும்பு உந்துகுழாய்களை நாளொன்றுக்கு 3.50 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றும் வகையில் 5 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 450 மி.மீ. விட்டமுள்ள வார்ப்பிரும்பு கழிவு நீர் உந்துகுழாய்களாக விரிவாக்கம் செய்யும் பணி;

இராமாபுரத்தைச் சார்ந்த பாரதி சாலை, அம்மன் நகர் ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 10.35 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றும் வகையில் 32 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான பாதாளச் சாக்கடை திட்டம்;

இராமாபுரத்தைச் சார்ந்த பணிமனை 154 மற்றும் 155 பகுதிகளுக்கு நாளொன்றிற்கு 26.58 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கும் வகையில் 52 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான குடிநீர் வழங்கும் திட்டம்;

என மொத்தம் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 5.04 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் முடிவுற்ற குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் ரூ.258.11 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்!**

மாநகராட்சி பகுதிகளான ஆவடி, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி – குதுப்பாபள்ளம் மற்றும் பாலக்கரை, தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காஞ்சிபுரம், கரூர், திண்டுக்கல், சேலம், ஓசூர், நாகர்கோயில், தாம்பரம் – குரோம்பேட்டை மற்றும் சேலையூர், திருநெல்வேலி, ஈரோடு மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் 52 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 20 அறிவுசார் மையங்கள்;

நகராட்சி பகுதிகளான செங்கல்பட்டு, திருவள்ளூர், குன்றத்தூர், திருக்கோவிலூர், நாமக்கல், குமாரபாளையம், தருமபுரி, பொள்ளாச்சி, உதகமண்டலம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மணப்பாறை, பெரம்பலூர், இராமநாதபுரம், சங்கரன்கோவில், கொல்லங்கோடு, விருதுநகர், அருப்புக்கோட்டை, அரியலூர், கள்ளக்குறிச்சி, கோவில்பட்டி, மேட்டுப்பாளையம், நாகப்பட்டினம், இராணிப்பேட்டை, தேனி – அல்லிநகரம், திருவண்ணாமலை, திருமங்கலம், விழுப்புரம், திருச்செங்கோடு, திருவத்திபுரம், திருவாரூர், திருப்பத்தூர், திண்டிவனம், பழனி, துறையூர், காரைக்குடி, கொடைக்கானல், பட்டுக்கோட்டை, தாரமங்கலம், திருவில்லிபுத்தூர், உளுந்தூர்பேட்டை, அரக்கோணம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் 76 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 43 அறிவுசார் மையங்கள்;

சிதம்பரத்தில் 48 இலட்சம் ரூபாய் செலவில் நூலகக் கட்டடம், கோயம்புத்தூரில் 3 கோடி ரூபாய் செலவில் அனுபவ மையம், தூத்துக்குடியில் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கற்றல் மையம்; திருப்பூரில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநகராட்சி மண்டல அலுவலகக் கட்டடம்; திருப்பூர் மாவட்டம் – பல்லடத்தில் 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

நாமக்கல் மாவட்டம் – பள்ளிப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை, சிவகாசி, தென்காசி, காஞ்சிபுரம், திருப்பூர் மாவட்டம் – பல்லடம், திருப்பூர் – மொராஜிதேசாய் நகர், தியாகி பழனிசாமி நகர், முருகம்பாளையம், தோட்டத்துப்பாளையம், பூலுவப்பட்டி, மண்ணரை, லட்சுமி நகர், மங்கலம் சாலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை, துறையூர், தேனி மாவட்டம் – பெரியகுளம், சின்னமனூர், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, தூத்துக்குடி சிதம்பரம் நகர், லூர்தாம்பாள்புரம், பாத்திமா நகர், சில்வர்புரம், பண்டாரம்பட்டி, நாகர்கோயில் – வடிவீஸ்வரம், தொல்லவிலை, வட்டவிலை, கிருஷ்ணன் கோவில், வடசேரி, ஆகிய இடங்களில் 14 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 நகர்ப்புற சுகாதார நல மையங்கள், 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 3 ஆய்வகக் கட்டடங்கள்;

வேலூர் மாவட்டம்பேரணாம்பட்டு, நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு, தேனி மாவட்டம் – கம்பம், திருப்பூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 4 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 பூங்காக்கள்;

நாமக்கல் மாவட்டம் – நாமக்கல் மற்றும் ராசிபுரம், ஈரோடு மாவட்டம் – புஞ்சை புளியம்பட்டி, திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி, தேனி மாவட்டம் – கம்பம் ஆகிய இடங்களில் 22 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 5 சந்தைகள்;

திருப்பூரில் 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம்; கோயம்புத்தூரில் 40 கோடி ரூபாய் செலவில் குறிச்சி ஏரிக்கரை புதுப்பிக்கும் பணி; காஞ்சிபுரம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வீடற்றவர்களுக்கான 2 தங்குமிடங்கள்;

சேலம் – அயன் திருமாளிகை தொடக்கப் பள்ளி மற்றும் சின்ன திருப்பதி நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள்; புதுக்கோட்டை மாவட்டம் – அறந்தாங்கியில் சூரியமூர்த்தி குளம் மற்றும் கோபால சமுத்திரம், கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி, சேலம் – கொல்லன்பட்டறை ஆகிய இடங்களில் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 பொது கழிப்பிடங்கள்; சேலத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் பஞ்சந்தாங்கி ஏரியில் 30 இலட்சம் ரூபாய் செலவில் கால்வாய் கட்டும் பணி; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூரில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நோயாளிகளின் உதவியாளர்களுக்கான தங்குமிடம்;

என மொத்தம் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் 258 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 125 பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் ரூ.56.94 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்!**

இராணிப்பேட்டை மாவட்டம் – நெமிலி, சேலம் மாவட்டம் – காடையாம்பட்டி, ஈரோடு மாவட்டம் – அந்தியூர், ஈரோடு மாவட்டம் – சிவகிரி, நம்பியூர், நசியனூர், திருப்பூர் மாவட்டம் – முத்தூர், குன்னத்தூர், ஊத்துக்குளி, மூலனூர் ஆகிய பேரூராட்சிகளில் 29 கோடியே 23 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 10 வாரச்சந்தைகள்;

சேலம் மாவட்டம் – கொளத்தூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் – கமுதி ஆகிய பேரூராட்சிகளில் 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வாரச்சந்தைகள்;

நீலகிரி மாவட்டம் – தேவர்சோலா மற்றும் நடுவட்டம், மதுரை மாவட்டம் – சோழவந்தான் ஆகிய பேரூராட்சிகளில் 8 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 3 பேருந்து நிலையங்கள்; கன்னியாகுமரி மாவட்டம் – புத்தளம் பேரூராட்சியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம்; ஈரோடு மாவட்டம் – கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு தங்குமிடம்;

காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர், திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர், நாமக்கல் மாவட்டம் – மோகனூர், பட்டணம், ஈரோடு மாவட்டம் – பெருந்துறை, மதுரை மாவட்டம் – அலங்காநல்லூர், சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூர், தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் ஆகிய பேரூராட்சிகளில் 12 கோடியே 69 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 8 அறிவுசார் மையங்கள்;

என மொத்தம் பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலான 25 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.78.42 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்!**

**நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் – காமராஜர் நகர், திரு.வி.க. நகர் மண்டலம் – சி.எஸ். நகர், அம்பத்தூர் மண்டலம் – வரதராஜபுரம் ஆகிய இடங்களில் 13 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள்;

**பூங்காக்கள்**

மாதவரம் மண்டலம் – ரங்கா அவென்யூ, சீனிவாச நகர் 2வது தெரு, ஜெய் மாருதி நகர் (கிழக்கு), ஸ்ரீ பாலாஜி நகர், வி.எஸ். மணி நகர் (தெற்கு), வி.எஸ். மணி நகர் (வடக்கு), இராயபுரம் மண்டலம் – மின்ட் மேம்பாலம் கீழ் பேசின் பாலம் சாலை, அண்ணா நகர் மண்டலம் – அண்ணா நகர் உள்வட்ட சாலை, வளசரவாக்கம் மண்டலம் – நொளம்பூர் 2வது பிரதான சாலை, எம்.எம்.டி.ஏ. காலனி 7வது பிளாக் பிரதான சாலை, கங்கா நகர் 3வது பிரதான சாலை, டி.என்.எச்.பி. OSR, டி.என்.எச்.பி. OSR 2, காமராஜர் நகர் 5வது பிளாக், வி.ஜி.என். நகர், பிருந்தாவன் நகர் 5வது தெரு, அருள்மிகு மீனாட்சி அம்மன் நகர், தமிழ் நகர், சோழிங்கநல்லூர் மண்டலம் – எம்.ஜி.ஆர். சாலை RMZ Phase1 ஆகிய இடங்களில் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 20 பூங்காக்கள்;

**விளையாட்டு திடல்கள்**

வளசரவாக்கம் மண்டலம் – ராயலா நகர் 1வது குறுக்கு தெரு, மணலி மண்டலம் – எம்.ஆர்.பி. நகர், மாதவரம் மண்டலம் சி.எம்.டி.ஏ. கனரக வாகனம் நிறுத்துமிடம், அண்ணா நகர் மண்டலம் திருநகர் 20வது தெரு, அடையாறு மண்டலம் – காந்தி நகரிலுள்ள கெனால் பேங்க் சாலையில் நகர்ப்புற அடர்ந்த காடு மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய 4 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 விளையாட்டு திடல்கள்;

**மறுசீரமைக்கப்பட்ட சென்னை பள்ளிகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளி வளாகங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்பு திட்டங்களின் கீழ், தண்டையார் பேட்டை மண்டலம் – பட்டேல் நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளி, புதிய மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, திரு.வி.க. நகர் மண்டலம் – குக்ஸ் சாலை, ஜமாலியாவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, அண்ணா நகர் மண்டலம் – செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தேனாம்பேட்டை மண்டலம் – நுங்கம்பாக்கம் பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சென்னை ஆரம்ப பள்ளி, சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆழ்வார்பேட்டையில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி மற்றும் சென்னை ஆரம்ப பள்ளி, கோடம்பாக்கம் மண்டலம் – நெசப்பாக்கம் ஏரிக்கரை தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அடையாறு மண்டலம் – கோட்டூர் வளாகத்தில் சென்னை உயர்நிலை பள்ளி, சென்னை ஆரம்ப பள்ளி, மற்றும் புதிய கல்வி வளாகம், என 50 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட சென்னை பள்ளிகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளி வளாகங்கள்;

என மொத்தம் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 78 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலான 40 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் ரூ.278.97 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 2 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் ஈஞ்சம்பாக்கம் பகுதியில் சுமார் 33,760 மக்கள் பயன்பெறும் வகையில் 196 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் மற்றும் உத்தண்டி பகுதியில் சுமார் 9400 மக்கள் பயன்பெறும் வகையில் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள விரிவான பாதாள சாக்கடைத் திட்டம், என மொத்தம் 278 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள இரண்டு பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 53 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அலுவலக உதவியாளர், களப்பணியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 4 நபர்களுக்கும்;

நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 68 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர் / வருவாய் உதவியாளர், அலுவலக உதவியாளர், பணி ஆய்வர், தொழில்நுட்ப உதவியாளர் ஆகிய பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு ஈவுத் தொகை வழங்குதல்!**

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையாக 18 கோடியே 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக ஈரோட்டிலிருந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா,

திருப்பூரிலிருந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், மாநகராட்சி மேயர் என்.தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி ஆணையர் பவன் குமார் ஜி.கிரியப்பனவர்,

திருச்சிராப்பள்ளியிலிருந்து மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஆர். வைத்தியநாதன்,

சேலத்திலிருந்து மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் ஆர். ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். கார்மேகம், மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர்,

திருப்பத்தூரிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, அ.நல்லதம்பி, மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையில் இம்மாதம் 7ஆம் தேதி தொடங்கவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டம் - விளந்தை அரசுப் பள்ளிகளில் திடீர் ஆய்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டார்!

அரியலூர், ஜன, 6-

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், விளந்தை ஊராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டு பள்ளியினை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிற்கிணங்க, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 234/77 ஆய்வுப் பயணத்திட்டத்தின் கீழ் 123வது சட்டமன்ற தொகுதியாக ஜெயங் கொண்டம் தொகுதிக்குட்பட்ட விளந்தை ஊராட்சி யில் ஒரே பள்ளி வளா கத்தில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு, பள்ளி உள் கட்டமைப்பு வசதிகளை பார்வையிட்டு விரிவான ஆய்வு மேற்கொண்டு மைதானம் மேம்பாட்டிற்கும், பள்ளி வளாக மேம்பாட்டிற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும், அப்பள்ளிகளில் உள்ள பயன்பாட்டில் இல்லாத கட்டடங்களின் நிலை குறித்து கவனத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலரிடம் அறிவுறுத்தினார். மேலும், கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மாணவர்களின் பாடப்புத்தகத்தினை வாசிக்கச் சொல்லி அவர்களின் வாசிப்புத் திறனை ஆய்வு மேற்கொண்டார். மேலும், பள்ளி மாணவ, மாணவியருடன் கலந்துரையாடி பொதுத்தேர்விற்கு நல்ல முறையில் படித்து தேர்ச்சி பெற்று கல்லூரியில் சேரவேண்டும் என்பதை இலக்காக கொண்டு செயல்பட வேண்டும் எனவும், பாடங்களில் சந்தேகங்கள் ஏற்படும் போது ஆசிரியர்களிடம் தயங்காமல் கேட்டு அதனை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் எனவும், பொதுத் தேர்வு குறித்து எந்தவித அச்சமும் மாணவர்களுக்கு ஏற்படக் கூடாது என்ற நோக்கத்தில் தான் அரையாண்டு தேர்வுகளிலேயே முழுபாடத் திட்டங்களுக்கும் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. மேலும் திருப்புதல் தேர்வுகளும் நடத்தப்படவுள்ளது. எனவே பொதுத் தேர்வினை சிறப்பான முறையில் எழுதி நல்ல கல்லூரியில் சேருவதை மட்டுமே இலக்காக கொள்ள வேண்டும் எனவும், பொதுத் தேர்வு எழுத உள்ள மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகளை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது விளந்தை அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் தமிழ்முருகன், விளந்தை அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் (பொ) அபிலா, பள்ளிக்கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## 47வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

## தலைமைக் கழக வெளியீடுகள்

**47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

## வேலூரில் - மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மாநாடு!

# ‘புதிய சிந்தனையாளன்’ பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழா!

## பேராசிரியர் மு.நாகநாதன் - தி.அ.முகமது சகி - ஆளூர் ஷா நவாஸ் - வாலாசா வல்லவன் சிறப்புரை!

வேலூர், ஜன.6 -

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி நடத்தும் ‘புதிய சிந்தனையாளன்’ பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழா மற்றும் தமிழ் தேசத்திற்குத் தன்னுரிமை, தன்னுரிமை மாநிலங்களின் கூட்டாட்சி மாநாடு வேலூரில் நடைபெறுகிறது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி நடத்தும் புதிய சிந்தனையாளன் பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழா மற்றும் தமிழ்த் தேசியத்திற்குத் தன்னுரிமை, தன்னுரிமை மாநிலங்களின் கூட்டாட்சி மாநாடு வேலூர், சத்துவாச்சாரி சோலை அரங்கத்தில் 7.1.2024 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை நடைபெறுகிறது.

புதிய சிந்தனையாளர் பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழாவில் மு.சுவாமிநாதன் தலைமையில் மோ.சி.சங்கர் வரவேற்புரையில் தமிழ்நாடு அரசின் முன்னாள் திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர் மு.நாகநாதன் மலர் வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார். முதல் மலரை முன்னாள் எம்.பி. தி.அ.முகமது சகி பெற்றுக்கொள்கிறார்.

இந்நிகழ்வில் மு.சுகுமார், டாக்டர் தி.ச.முகமது சயி, இரா. முல்லை, வேலூர் பிலிப், மா.முருகேசன், க.குப்புசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் அன்று பிற்பகல் 5.30 முதல் 8.30 மணி வரை நடைபெறும் தமிழ்த் தேசத்திற்குத் தன்னுரிமை, தன்னுரிமை மாநிலங்களின் கூட்டாட்சி மாநாட்டில் தி.துரை சித்தார்த்தன் தலைமையில் நா.மதன கவி வரவேற்புரையில் பேராசிரியர் த.செய ராமன், வி.சி.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ. ஆகியோர் கருத்துரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் புதிய சிந்தனையாளர் ஆசிரியரும் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளருமான வாலாசா வல்லவன், சா.குப்பன், முத்தமிழ், நா.செவ்வேள், இர.நடராசன், சி.நட ராசன், இரா.திருநாவுக்கரசு, காஞ்சி அமுதன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

க.முகிலன் நிறைவுரையாற்ற மீ.டில்லிபாபு நன்றி கூறுகிறார்.



ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கம்பம் சுருளிபட்டி ஊராட்சியில் வளர்ச்சி பணிகள் குறித்து ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் நேரில் ஆய்வு செய்தார் மற்றும் கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

## 6.74கோடி ரூபாய் மதிப்பீட்டில

# செஞ்சியில் - அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர் கே .என். நேரு திறந்து வைத்தார்!

செஞ்சி, ஜன. 6-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையத்தை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு அதிநவீன புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்அனைவரையும் வரவேற்றார். பேரூராட்சிகளில் இயக்குனர் கிரண் குராலா திட்ட அறிக்கையை வாசித்தார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அதிநவீன அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்துமுத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில்:

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் நாளை முதல்வர் காணொலி மூலம் ரூ 1933 கோடி மதிப்பிலான கட்டிடங்களை திறந்துவைக்கிறார். மேலும் நகராட்சி நிர்வாக துறைக்கு முதல்வர் ரூ 24 ஆயிரம் கோடி ஒதுக்கி உள்ளார்.

பேரூராட்சி நிர்வாகத்திற்காக ரூ 5 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் 490 பேரூராட்சிகளில் 31 பேரூராட்சிகளில் புதிய கட்டிடங்கள் கட்ட ரூ 80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

51 பேரூராட்சிகளில் வார சந்தை அமைக்க ரூ 110.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

13 பேரூராட்சிகளில் ரூ 20.44 கோடி மதிப்பீட்டில் அறிவு சார் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் குடிநீருக்கு பத்தாயிரம் கோடி ஒதுக்கீடு செய்தனர்.

முதலமைச்சராக தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிட 3 ஆண்டுகளில் ரூ 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் .

அந்த வகையில் செஞ்சி பேரூராட்சிகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு கடந்த 2.1/2 ஆண்டுகளில் ரூ 53.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி நகர்புறங்களில் 45 சதவீதமக்கள் வாழ்ந்துவந்தனர் தற்போது இது 60 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும் சென்னை தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நகராட்சி துறை சார்பில் செய்த பணிகள் அளப்பறியாதது எனதெரிவித்த அமைச்சர் கே.என். நேரு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி துறைக்கு தரும் ஊக்கம் தான்அனைத்து பணிகளையும் செய்ய முடிந்ததுஎன அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமைச்சர் செஞ்சிமஸ்தான் பேசுகையில்:

நான் முதல் முறையாக 1986ம் ஆண்டு பேரூராட்சி தலைவராகப் பெறுப்பேற்ற போது நகரில் குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாத நகரமாக இருந்தது. திமுக ஆட்சியில் திருக்கோவிலூர் தென் பெண்ணை ஆற்றில் 54 கி.மீ., தூரத்தில் இருந்து 6 கோடி ரூபாய் மதிப்பில் செஞ்சி - அனந்தபுரம் கூட்டு குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டது. முதல்வர் ஸ்டாலின் துணை முதல்வராக இருந்த போது செஞ்சிக்கு என தனி குடிநீர் திட்டம் அறிவித்து ரூ16 கோடி ஒதுக்கி எல்லோருக்கும் குடிநீர் வழங்கினார். இப்போது அமைச்சர் நேரு ரூ33 கோடி ஒதுக்கி அனைத்து வீடுகளுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

செஞ்சியில் சக்கராபுரம் பழைய காலனி, புதிய காலனி, சிறுகடம்பூர் காலனியில் சமுதாய கூடம் கட்டவும், செஞ்சியில் அறிவு சார் மையம் அமைக்கவும், செஞ்சி கோட்டை ஆஞ்சநேயர் கோவிலுக்கு செல்லும் சாலையை தார் சாலையாக அமைக்கவும், மேல் களவாய் ரோட்டில் சங்கராபரணி ஆற்றில் மேம்பாலம் கட்டுவதற்கு ஏதுவாக பேரூராட்சியிடம் உள்ள 1600 மீட்டர் சாலையை நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைக்கவும் அமைச்சர் கே.என்.நேரு அனுமதி அளிக்க வேண்டும். இதை செஞ்சி நகர மக்கள் சார்பாக கேட்டு கொள்கிறேன் என்றார்.

இதைத் தொடர்ந்து செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து மூன்று வழித்தடங்களில் புதிய பேருந்து சேவையை அமைச்சர் கே என் நேரு ,அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் விஷ்ணு பிரசாத், பேரூராட்சிகளின் கண்காணிப்பு பொறியாளர் திருமா வளவன், பேரூராட்சிகளின் கடலூர் மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர் வெங்கடேசன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சேது நாதன், செந்தமிழ் செல்வன், சீத்தாபதி சொக்கலிங்கம்,மாநில விவசாய அணி இணை செயலாளர் அன்னியூர் சிவா,மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந் தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதா ரவிக்குமார்,மரக்காணம் தயாளன் ஒலக்கூர் சொக்கலிங்கம் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன்,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன்,துணைச் செயலாளர் ரவிக்குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், சாந்தி ஏழுமலை,துணை சேர்மன்கள் ஜெயபாலன், பழனி, விஜயலட்சுமி முருகன், ராஜலட்சுமி செயல்மணி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன்,

பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், நாராயணமூர்த்தி, துரை ,இளம்வழுதி, மணிமாறன், செழியன், ரவிச்சந்திரன், ராஜாராமன், நகர செயலாளர் கண்ணன் ,பேரு செயலாளர்கள்கார்த்திக், சம்பத் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார் நன்றி கூறினார்.



இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மண்டபம் கோயில் வாடி பகுதியில் 30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் தூண்டில் வளைவு துறைமுகம் மற்றும் தங்கச்சி மடத்தில் 8.95 கோடி மதிப்பீட்டில் அலை தடுப்பு பாதுகாப்பு சுவர் மற்றும் வலை பின்னும் கூடம் ஆகியவற்றை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்து பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். இதன் மூலம் 175 விசை படகுகளும் 250 நாட்டு படகுகளும் பாதுகாப்புடன் நிறுத்தி வைப்பதற்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள், மீனவ சங்க தலைவர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை முருகையன்

### சனவரி 6 (2003)



**திருவண்ணாமலையில் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். தொடக்கக் காலத்திலிருந்து கழக உறுப்பினராக இருந்தவர்.**

**வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**மூன்று முறை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். 1980ல் திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பேரிடர் நிவாரண நிதி : தமிழ்நாட்டைச் சேர்ந்த

# அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் அமைச்சர் அமித்ஷாவை சந்திக்க முடிவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 6 -

**தமிழ்நாடு அரசு கோரியுள்ள வெள்ள நிவாரணத் தொகையை உடனடியாக ஒதுக்கீடு செய்ய வலியுறுத்திட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்திக்க நேரம் கோரியுள்ளனர் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் “மிக்ஜாம் புயலினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பெருமழை ஏற்பட்டு, அதன் காரணமாக கடுமையான பாதிப்புகளும், பொதுமக்களுக்கு வாழ்வாதார பாதிப்புகளும் ஏற்பட்டன. அதே போன்று, டிசம்பர் 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் ஏற்பட்ட வரலாறு காணாத அதிக மழைப் பொழிவின் காரணமாக, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகக் கடுமையான வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டன.

தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த இந்த இரண்டு மிகப் பெரிய இயற்கைப் பேரிடர்களுக்கும் ஒன்றிய அரசிடமிருந்து நிவாரணத்



தொகையாக தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 37,907.19 கோடி ஏற்கெனவே கோரியுள்ளது.

### உரிய நிதி வழங்குவதாக ராஜ்நாத்சிங் உறுதியளித்தார்!

இது சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 19,692.67 கோடி ரூபாயும், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 18,214.52 கோடி ரூபாயும் உள்ளடக்கியதாகும்.

மிக்ஜாம் புயலினால் சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான பாதிப்புகளைப் பார்வையிட ஒன்றிய குழுவினர் டிசம்பர் 12 மற்றும் 13 தேதிகளில் வந்து பார்வையிட்டுச் சென்றனர். அதோடு, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்களும் தமிழ்நாட்டிற்கு வந்து, மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்புகளை 7.12.2023 அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து உரிய நிவாரணத் தொகையை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

### இதுவரை நிவாரண நிதி ஒதுக்கப்படவில்லை!

அதேபோன்று, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகனமழை காரணமாக ஏற்பட்ட பெருத்த பாதிப்புகளை ஒன்றியக் குழுவினர் 20.12.2023 அன்று நேரில் பார்வையிட்டனர். ஒன்றியக் குழுவினர் இம்மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளை ஆய்வு செய்திடத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மாநில அரசு செய்து தந்திருந்தது. இதுமட்டுமின்றி, ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களும் 26.12.2023 அன்று தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்று, வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தார். மேலும், இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 2.1.2024 அன்று தமிழ்நாட்டிற்கு வருகை தந்து, திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ள பாதிப்புகள் தொடர்பாக குறிப்பிட்டு, சேதங்கள் குறித்த தனது வருத்தத்தையும், வேதனையையும் பதிவு செய்திருந்தார்.

ஆனால், ஒன்றிய குழுக்களின் வருகைக்குப் பின்னரும், ஒன்றிய அமைச்சர்கள் பார்வையிட்டதற்குப் பிறகும், நிவாரணத் தொகை கோரி தமிழ்நாடு அரசின் சார்பில் இரண்டு கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், ஒன்றிய அரசிடமிருந்து இதுவரை நிவாரணப் பணிகளுக்கென எந்தவொரு நிவாரணத் தொகையும் பெறப்படவில்லை. இதுபோன்ற இயற்கைப் பேரிடர்கள் மற்ற மாநிலங்களில் ஏற்பட்டபோது, குறுகிய காலத்திற்குள் ஒன்றிய அரசு நிவாரண நிதியினை தேசிய பேரிடர் நிதியிலிருந்து வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மாநில மக்களின் நலனில் அக்கறை கொண்டு, இரண்டு பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காகவும், கடுமையாக பாதிக்கப்பட்ட ஏழையெளிய, நடுத்தர மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திடவும், தமிழ்நாடு அரசு இதுவரை 2,100 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

அதுமட்டுமின்றி, இந்த இயற்கைப் பேரிடர்களினால் பாதிக்கப்பட்ட சிறு, குறு தொழில் நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள், சிறு வியாபாரிகள், விவசாயிகள், மீனவர்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் 1000 கோடி ரூபாய் மதிப்பிலான வாழ்வாதார மறுகட்டமைப்புத் திட்டத்தினையும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசு கோரியுள்ள 37,907.19 கோடி ரூபாயினை உடனடியாக வழங்கிட வலியுறுத்தி, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்திக்க நேரம் கோரப்பட்டுள்ளது”

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

## புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை ஜன.6-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 04.01.2024 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முடிவுற்ற பல்வேறு கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது. அதன்படி அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கீழாநிலைக்கோட்டை, அய்யாக்கண்ணு அரசு மேல்நிலைப் பள்ளியில், நபார்டு வங்கி திட்டத்தின்கீழ் ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆறு வகுப்பறை மற்றும் இரண்டு அறிவியல் ஆய்வகக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பள்ளியில் அதிக அளவிலான மாணவ, மாணவிகள் பயில்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனை மாணவ, மாணவிகள் உரிய முறையில் பயன்படுத்தி கொண்டு கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

அதனைத்தொடர்ந்து, புதுநிலைவயல் ஊராட்சி, கீழாநிலைக்கோட்டை, அரியநாயகி அம்மன் கோயில் தெற்கு பகுதியில், மாநில நிதிக்குழு மான்யத் திட்டத்தின்கீழ் ரூ.9.66 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேவர் பிளாக் சாலை திறந்து வைத்து, அரியநாயகி அம்மன் திருக்கோயில் குளம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணிகளும் பார்வையிடப்பட்டது. மேலும் காரமங்கலம் ஊராட்சி, காயாம்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் மற்றும் கும்மங்குடி ஊராட்சி, தெற்கு பொந்துப்புளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, 23 நபர்களுக்கு ரூ.9 இலட்சம் மதிப்பிலான நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளும் வழங்கப்பட்டது. மேலும் மேல்நிலைவயல் ஊராட்சி, பூனையன் குடியிருப்பு பகுதியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டிடமும், கும்மங்குடி ஊராட்சி, தெற்கு பொந்துப்புளியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT), ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சாலையினையும் உள்ளிட்ட முடிவுற்ற கட்டிடப் பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

---

## அமைச்சரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியாது!

# செந்தில் பாலாஜி அமைச்சராகத் தொடர தடை இல்லை!

### உச்ச நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜன. 6-

செந்தில்பாலாஜி அமைச்சராக தொடர தடையில்லை என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், செந்தில் பாலாஜியின் அமைச்சர் பதவியை நீக்கக் கோரிய வழக்கையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கக் கோரிய மனுவை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே தள்ளுபடி செய்திருந்தது.

இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் அபய் ஒக்கா, உஜ்ஜால் பூயான் ஆகியோர் அடங்கிய அமர்வு, முதலமைச்சரின் பரிந்துரை இல்லாமல் ஒரு அமைச்சரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியாது. ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தெரிவித்தது. சென்னை உயர் நீதிமன்றம் சரியான முறையில்தான் தீர்ப்பு வழங்கி இருக்கிறது எனவே இந்த விவகாரத்தில் தலையிடத் தேவையில்லை என கூறி மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

---

## கலைஞர் நூற்றாண்டு விழா – கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட

# வர்த்தகர் அணி சார்பில் 100 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் வழங்கினார்!

கன்னியாகுமரி, ஜன. 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் 100 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவானது 04.01.2024 அன்று வெள்ளிச்சந்தை ஊராட்சி அலுவலகம் அருகில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் சி.என். செல்வன் தலைமையில் நடைபெற்றது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர். நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் வி.ஜோசப் ராஜ், மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரத்தினம், ஒன்றியச் செயலாளர்கள் சுரேந்திர குமார், பி.எஸ்.பி. சந்திரா, வெள்ளிச்சந்தை ஊராட்சி மன்ற தலைவர் தாமஸ் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள்

ஜோசப் ராஜ், எல்டபோன்ஸ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி தலைவர் நீலராஜன், துணைத் தலைவர் குமார், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்கள் மோகனகுமார், சகாய மோசஸ் ஜெயகுமார், முத்து கிருஷ்ணன், மகாவிஷ்ணு, வாரன் உட்பட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், எம்.அம்மாபட்டி ஊராட்சியில் நேற்று முன்தினம் (04.01.2024) பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர்(பொறுப்பு) சிவக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 07.05.1956

மறைவு : 06.01.2023

த.சின்னதுரை M.A.,


முன்னாள் செயலாளர், 75 (அ) வட்ட தி.மு.க,

திரு.வி.க.நகர் தெற்கு பகுதி, வடசென்னை கிழக்கு மாவட்டம்

என்றும் நீங்காத நினைவுகளுடன் ...

அன்பு மனைவி மற்றும் குடும்பத்தினர்


கலைஞர்
100
1924 - 2023
நாள்: 06.01.2024
சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: YMCA மைதானம்,
ராயப்பேட்டை
சேப்பாக்கம் பகுதி தி.மு.க சார்பில்
வாக்குச்சாவடி
பாக முகவர்களுக்கு (BLA 2) (BLA C)
ஆலோசனை வழங்கி
நலத்திட்ட உதவிகள்
வழங்க வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை
இளம்தலைவர்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
திரு. தயாநிதி மாறன் MP, திரு. மு.க.தமிழரசு, திரு. நே.சிற்றரசு MC
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர்
பணிகள் குழு தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
அன்புடன்
எஸ்.மதன்மோகன் MC
சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர்
9வது மண்டல குழு தலைவர், பெருநகர சென்னை மாநகராட்சி
சேப்பாக்கம் பகுதி தி.மு.க - சென்னை மேற்கு மாவட்டம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்த்குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வேலூர் மாநகராட்சியின் மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒரு மாத ஊதியத் தொகையாக மொத்தம் 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் உள்ளனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு திருப்பூர் மாநகராட்சியின் சார்பாக மேயர், துணை மேயர், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள், திருப்பூர் டையர்ஸ் அசோசியேஷன், திருப்பூர் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தன்னார்வலர் அமைப்புகள் என அனைவரும் அளித்த 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், பொன்பியூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் எம். பொன்னுசாமி, செயல் இயக்குநர்கள் சூர்ய பிரகாஷ், லட்சுமிபதி ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை ராதா பொறியியல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள் வி.ஆர். செந்தில்குமார் மற்றும் திருமதி வி. ராதா செல்வி, இயக்குநர் திருமதி பத்மாவதி ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், காக்னிசென்ட் (Cognizant) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜேஷ் நம்பியார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காக்னிசென்ட் (Cognizant) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் அரசியல் விவகாரத் துறையின் புருஷோத்தமன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. . மதிவேந்தன், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் (Tamil Nadu Forest Plantation Corporation Ltd.,(2022 2023 நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 17 கோடியே 73 இலட்சத்து 86 ஆயிரத்து 921 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி வி. கருணபிரியா, ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி நிறுவனத்தின் (KMBF) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். கல்யாணசுந்தரம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி. வேலப்பன், வழக்கறிஞர் எஸ்.கே. ஸ்ரீதர், வினோத் வேலப்பன் ஆகியோர் உள்ளனர்.

### ரூ.18 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில்

# காவல் துறைக்கு புதிய கட்டடங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 6 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2024) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 62 காவலர் குடியிருப்பு கள், 2 காவல் நிலையங்கள், திருநெல்வேலி மாநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படைகளுக்கு 2 ஒருங் கிணைந்த நிர்வாகக் கட்ட டங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

காவல்துறை என்பது குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, இவ்வரசு பொறுப்பேற்றப் பிறகு காவல் நிலையங்களுக்காக 46.28 கோடி ரூபாய், காவல் குடியிருப்புகளுக்காக 764.13 கோடி ரூபாய், காவல் துறையின் இதர கட்டடங்களுக்கென 115.77 கோடி ரூபாய், சொந்த இல்லத் திட்டத்தின்கீழ் 55.19 கோடி ரூபாய் மற்றும் சிறப்பு பராமரிப்புப் பணிகளுக்கென 149 கோடி ரூபாய் என பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு 1130.37 கோடி ரூபாயும், காவல் கண்காணிப்பு பணிகளுக்கு ரோந்து வாகனங்களுக்காக 88 கோடியே 91 இலட்சம் ரூபாயும், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 571.15 கோடி ரூபாயும் என மொத்தம் 1790 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களைக் காவல்துறையின் மேம்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம், முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம் - ஆனைமலையில் 4 கோடியே 69 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 30 காவலர் குடியிருப்புகள் மற்றும் நாமக்கல் மாவட்டம் - குமாரப்பாளையத்தில் 4 கோடியே 8 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 32 காவலர் குடியிருப்புகள், என மொத்தம் 8 கோடியே 78 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 62 காவலர் குடியிருப்புகளைத் திறந்து வைத்தார்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் 67 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள போக்குவரத்து காவல் நிலையக் கட்டடம், திருப்பூர் மாவட்டம் - அவிநாசிபாளையத்தில் 1 கோடியே 17 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையக் கட்டடங்களும், திருநெல்வேலி மாநகர ஆயுதப்படை மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படைகளுக்கு பாளையங்கோட்டை ஆயுதப் படை வளாகத்தில் 7 கோடியே 56 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஒருங்கிணைந்த நிர்வாகக் கட்டடங்கள், என மொத்தம் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மை செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், பன்றிமலை ஊராட்சியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சிவகுருசாமி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று காலை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நாகர்கோவில் மாநகராட்சி, கோணம் பகுதியில் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் பி.என். ஸ்ரீதர் தலைமையில், மாவட்டச் செயலாளர் –மேயர் ரெ. மகேஷ் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியம், உதவி பொறியாளர் திருமதி. ராஜசிலி, இளநிலை பொறியாளர் ராஜா, கொல்லங்கோடு நகராட்சி தலைவர் திருமதி. ராணி ஸ்டீபன், மண்டல தலைவர்கள் செல்வகுமார், ஜவகர், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சிஜி, தங்கராஜா, அமல செல்வன், பள்ளி மாணவ, மாணவிகள், பொது மக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ‘மிக்ஜாம்’ புயலால் பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட 4 மாவட்ட

# சிறு வணிகர்களுக்கு - முதலமைச்சரின் சிறப்பு சிறுவணிகர் கடன் திட்டம்!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஜன. 6 -

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கூட்டுறவுத்துறையின் மூலம் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சிறுவணிகர்களுக்கான “முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான சிறப்பு முகாம்கள் சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் காஞ்சிபுரம். திருவள்ளூர். செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் நடைபெறவுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது :

தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய “மிக்ஜாம்” புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் குறிப் பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, “மிக்ஜாம்” புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சிறு வணிகர்களின் தொழில் பயன்பாட்டிற்கான இயந்திரங்களை பழுதுபார்க்கவும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க வும் “முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” எனும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**குறைந்த வட்டியில் அதிகபட்சக் கடன்!**

சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் காஞ்சிபுரம். திருவள்ளூர். செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் குறைந்த வட்டியில் அதிகபட்ச கடன் தொகை ரூ.10,000/ வரை வழங்கப்படும்.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள், தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த அட்டை உடைய தெருவியாபாரிகள், சிறு வணிகர்கள், வணிக உபயோகத்திற்காக மின் இணைப்பு பெற்ற சிறு கடை வியாபாரிகள், தெருவோரங்களில் வியாபாரம் செய்யும் பூ வியாபாரிகள், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்பவர்கள், சாலையோர உணவகங்கள் நடத்துபவர்கள், கைவினைஞர்கள், மீனவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் (புயலால் பழுதடைந்த ஆட்டோவினை சீரமைக்க), அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதையில் கடை வைத்திருப்பவர்கள் ஆகிய சிறு வணிகர்கள்/ சிறு, குறு தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தின் மூலம் கடன் பெற தகுதியானவர்கள் ஆவர்.

**ஜனவரி 5 முதல் 12 வரை முகாம்கள்!**

இக்கடனை 50 வாரங்களில் வாரந்தோறும் ரூ.200/ என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் உரிய வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் அல்லது மாதந்தோறும் ரூ.1000/ வீதம் உரிய வட்டியுடன் திருப்பி செலுத்தலாம்.

“முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்” முகாம்கள் நான்கு மாவட்டங்களிலும் 05.01.2024 முதல் 12.01.2024 வரை நடைபெறவுள்ளது.

சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளான தியாகராய நகர் ரோட்டில் செயல்பட்டு வரும் பாண்டிபஜார் கிளை, திருவல்லிக்கேணி, சிங்கராசாரி தெருவில் செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி கிளை, அசோக் நகர், 4 வது அவென்யூவில் செயல்பட்டு வரும் அசோக் நகர் கிளை, அண்ணா நகர், முதல் மெயின்ரோட்டில் செயல்பட்டு வரும் அண்ணா நகர் கிழக்கு கிளை, ஆதம்பாக்கம் செக்ரடேரியட் காலனியில் செயல்பட்டு வரும் ஆதம்பாக்கம் கிளை, பெரியார் நகர், கார்த்திகேயன் காலனியில் செயல்பட்டு வரும், பெரியார் நகர் கிளை, பிராட்வே, பிரகாசம் சாலையில் செயல்பட்டு வரும் மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் என 7 இடங்களில் நடைபெறவுள்ளது.

அதேபோல, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளான திருப்பெரும்புதூர் காந்திரோட்டில் செயல்பட்டு வரும் திருப்பெரும்புதூர் கிளை, குன்றத்தூர், சடையாண்டீஸ்வரர் கோயில் தெருவில் செயல்பட்டு வரும் குன்றத்தூர் கிளை, செங்கல்பட்டு, ஜீ.எஸ்.டி. சாலையில் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு கிளை, திருப்போரூர் பழைய மாமல்லபுரம் சாலையில் செயல்பட்டு வரும் திருப்போரூர் கிளை, திருவள்ளூர், ஜெயா நகரில் செயல்பட்டு வரும் திருவள்ளூர் கிளை, கடம்பத்தூர் கடை வீதியில் செயல்பட்டு வரும் கடம்பத்தூர் கிளை, பூவிருந்தமல்லி நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் பூவிருந்தமல்லி கிளை, செங்குன்றம் பஜனை கோயில் தெருவில் செயல்பட்டு வரும் செங்குன்றம் கிளை, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் மீஞ்சூர் கிளை, பொன்னேரி புதிய தேரடி சாலையில் செயல்பட்டு வரும் பொன்னேரி கிளை, கும்மிடிப்பூண்டி, காட்டுக் கொல்லைத் தெருவில் செயல்பட்டுவரும்கும்மிடிப்பூண்டி கிளை, ஊத்துக்கோட்டை பஜார் தெருவில் செயல்பட்டு வரும் ஊத்துக்கோட்டை கிளை என 12 இடங்களில் நடைபெறவுள்ளது.

இந்த சிறப்பு கடன் முகாம்களை சிறுவணிகர்கள் வங்கிக் கிளைகளை நேரில் அணுகியோ அல்லது உரிய ஆவணங்கள் மற்றும் விவரங்களை கூட்டுறவுத் துறையின் வலைதளத்தில் உள்ள இணையவழி விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தோ பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### புதுச்சேரி மாநிலத்தில்

# ஸ்விகி, சொமோட்டோ தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுவை, ஜன. 6 -

புதுவை மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புதுச்சேரி மாநிலத்தில் கடந்த காலத்தைவிட வரி வசூல், ஜி.எஸ்.டி., வளர்ச்சி போன்ற காரணங்களால் தொழில் செய்வதற்கான சூழல் மேம்பட்டுள்ளதாக இந்திய தொழில் கூட்டமைப்பு புதுச்சேரி அரசுக்கு முழு ஆதரவு இருந்தும், திறமையான உழைக்கும் திறன் கொண்ட மனித வளம் இருந்தும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதில் என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி அரசு தோல்விகண்டுள்ளது.

தொழில் வளத்தை மேம்படுத்த சேதராப்பட்டில் 750 ஏக்கர் நிலம் இருந்தும் அங்கு மருந்து உற்பத்தி தொழிற்சாலைகள், தகவல் தொழிற்நுட்ப நிறுவ னங்கள், ஜவுளி பூங்கா அமைப்பதற்கான எந்த முயற்சியும் இந்த அரசு எடுக்கவில்லை. படித்த இளைஞர்களுக்கு



தாராளமாக வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று ஆட்சியாளர்கள் வாய் சவடால் பேசினார்கள். இதற்கெல்லாம் மேலாக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி தொழில் முதலீட்டை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

**வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது!**

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக புது ச்சேரியில் வேலையில்லா திண்டாட்டம் பெருகியுள்ளது. இதனால் படித்த புதுச்சேரி இளைஞர்கள் அரசுப்பணி எட்டாக்கனி ஆகிவிட்டதாலும், படிப்புக்கேற்ற வேலை இல்லாததாலும் கிடைக்கும் வேலையை செய்து குறைந்த சம்பளத்தில் குடும்பம் நடத்தி வருகிறார்கள். இதனைக்கண்டு புதுச்சேரி அரசு வெட்கப்பட வேண்டும்.

அந்த வகையில் புதுச்சேரி மாநிலத்தில் ஸ்விகி, சொமோட்டோ உள்ளிட்ட இணையவழி ஆப்கள் மூலம் உணவு டெலிவரி சேவையிலும், ப்ளிப்கார்ட், அமேசான் உள்ளிட்டவை மூலமாக மளிகை மற்றும் இன்னும் பிற பொருட்களின் டெலிவரி செய்யும் பணியில் பகுதி நேரமாகவும், முழு நேரமாகவும் பல நூறு இளைஞர்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பணியாற்றி வருகிறார்கள். சுற்றுலாவை நம்பி இருக்கும் உணவு விடுகளின் பங்காளனாக செயல்படும் இந்த ஊழியர்களால் பல நூறு குடும்பங்களுக்கு குறித்த நேரத்தில் உணவு எடுத்துச் செல்லப்படுகிறது. இது நேரடியாகவும், மறைமுகமாகவும் புதுச்சேரியில் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காக அமைகிறது. சுற்றுலாப் பயணிகளும், வேலைக்கு செல்பவர்களும் இணைய வழி சேவையை பெரிதும் பயன்படுத்துகிறார்கள்.

**புதுச்சேரி அரசு மவுனம் காத்து வருகிறது!**

சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் டெலிவரி செய்ய வேண்டும் என்ற நோக்கில் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றும் அந்த ஊழியர்களுக்கு பணியிட பாதுகாப்போ, பணிநிரந்தரமோ கிடையாது. இரவுபகல் பாராது மக்கள் பசியைத் தீர்க்கும் இந்த ஊழியர்கள் உரிமை கேட்டு வீதியில் இறங்கிப் போராடும் சூழலும் அவ்வப்போது நிகழ்ந்து வருகிறது. இதன் காரணமாக முறைப்படு த்தப்பட்ட தொழிலாளர்களாக இவர்களை மாற்றி, தொழிலாளர் நலத்துறையின் அடிப்படை சலுகைகளையாவது வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தும் வருகின்றனர். ஆனால் வழக்கம் போல் புதுச்சேரி அரசு மவுனம் காத்து வருகிறது.

ஆனால் மக்கள் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஸ்விகி, சொமோட்டோ போன்ற இணையவழி செயலி மூலம் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைத்தும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்தும் அரசாணை வெளியிட்டுள்ளார். ராஜஸ்தான் மாநிலத்தில் நலவாரியம் அறிவிப்பு செய்திருந்தாலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் இணையம் சார்ந்த கிக் (GIG) தொழிலாளர்கள் நலவாரியம் (TAMIL NADU PLAT FORM BASED GIG WORKERS WELFARE BOARD) எனும் புதிய நலவாரியத்தை தோற்றுவித்து அவர்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றிய பெருமை எங்கள் திராவிட மாடல் அரசுக்கே உண்டு. இதன் மூலம் தொழிலாளர்களுக்கு சமூக, பொருளாதார ரீதியிலான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நலவாரியத்தில் உறுப்பினராகச் சேரும் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பணி சமயத்தில் இறந்தால் நிவாரண உதவி, திருமண உதவி தொகை, குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை, அரசு காப்பீடு திட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகளும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் பணியாற்றும் சுமார் ஒரு லட்சம் இணையவழி தொழிலாளர்கள் பயன்பெற முடியும்.

**பணி பாதுகாப்பை உறுதிச் செய்ய வேண்டும்!**

ஆனால் புதுச்சேரியில் படித்த இளைஞர்களுக்கு வேலை வழங்க இயலாத அரசாக என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. அரசு உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழக அரசை தினம்தோறும் விமர்சனம் செய்து அரசியல் ஆதாயம் தேடும் துணைநிலை ஆளுநர் அவர்களும், அவருக்கு ஒத்தூதும் முதல்வர் ரங்கசாமி அவர்களும் பசிப்பிணியைப் போக்க படித்த படிப்பை ஓரம்கட்டிவிட்டு கவுரவமாக பணியாற்றும் ஸ்விகி, சொமோட்டோ உள்ளிட்ட இணையவழி சேவையில் ஈடுபட்டு இருக்கும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் நலன் காக்க அவர்களுக்கு தமிழக திராவிட மாடல் அரசைப் பின்பற்றி நலவாரியம் அமைத்து அவர்களின் பணி பாதுகாப்பை உறுதிச் செய்ய வேண்டும். அல்லது புதுச்சேரி அமைப்புசாரா தொழிற்சங்கத்தில் உள்ள 26 பிரிவு தொழிலாளர்களோடு இவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம், அரியநாயகியபுரம் கிராமத்தில் மழையால் பாதிக்கப்பட 340 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் வழங்கினார். உடன் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்புராஜன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் சிறுபான்மையினர் நல அமைப்பாளர் ஜாகிர்உசேன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆவுடையப்பன், ஊராட்சி மன்றத் தலைவர் மாரியம்மாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அல்காப், கிளை பிரதிநிதி கத்தாலி கிளைச் செயலாளர் கருப்பசாமி, விளாத்திகுளம் பேரூராட்சி முன்னாள் வார்டு உறுப்பினர் புஷ்பராஜ், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி சமூக வலைதள அணி ஒருங்கிணைப்பாளர் கரண் குமார் உட்பட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடிக்கு இரண்டாவது முறையாக

# ரூ.7 லட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருள்கள்!

## திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. அனுப்பிவைத்தார்

சிவகங்கை. ஜன.6-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் ஏற்பாட்டினால் பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு முதல்வர் தளபதி அவர்களின் வேண்டுகோளின்படி. ருபாய் 7 லட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை இரண்டாவது முறையாக லாரி மூலம் அனுப்பி வைத்தார் .இதில் அரிசி, மளிகை பொருட்கள், குடிநீர், பிஸ்கட் பாக்கெட்டுகள், போன்றவைகள் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன் கூட்டுறவு சங்க தலைவர் சுப. தமிழரசன், திருப்பு வனம் கிழக்கு ஒன்றிய செயலாளர், எம்.ஏ. கடம்பசாமி முருகன் காங்கிரஸ் பிரமுகர் ஏ.ஆர்.பி.முருகேசன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மு. தம்பையா**

**சனவரி 6 (2023)**



கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.

பகுதிப் பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்குப் பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024:

# டிரில்லியன் டாலர் கனவின் திசை!

## ‘இந்து தமிழ் திசை’ நாளேடு கட்டுரை




சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில், ஜனவரி 7, 8 ஆகிய தேதிகளில் ‘உலக முதலீட்டாளர் மாநாடு’ பிரம்மாண்ட அளவில் நடைபெற உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் கொண்ட பொருளாதாரமாகத் தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற உயரிய கொள்கையை நோக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறார். அதன் ஒருபகுதியாக இந்த மாநாடு அமைய உள்ளது. இந்த மாநாட்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான செயல் திட்டத்தை வெளியிட்டு முதலமைச்சர் பேச உள்ளார்.

தமிழ்நாடு அரசின் செயல் திட்டமாக உருவெடுத்துள்ள ஒரு டிரில்லியன் டாலர் கனவு, 2019இல் முதலில் அறிவிக்கப்பட்டது. அதற்கான பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு அரசு இத்தகைய முதலீட்டாளர் மாநாட்டினை நடத்துவதன் நோக்கம், பின்னணி, இத்தகைய மாநாடு கொண்டுவரும் உடனடி விளைவுகள், நீண்டகால விளைவுகள், சென்னை தாண்டி தென் மாவட்டங்களில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான முன்னெடுப்புகள் எனப் பல விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

**கிடைக்கப்போகும் பலன்கள்:** தமிழ்நாடு அரசு உலக நாடுகளிலிருந்து அந்நிய முதலீட்டைத் தமிழ்நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான ஒரு மிகப்பெரிய முன்னெடுப்பே உலக முதலீட்டாளர் மாநாடு. குறிப்பாக, அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் முதலீட்டாளர்களைக் அழைத்துவந்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான முயற்சியின் ஒரு பகுதி இது. உலக முதலீட்டாளர் மாநாட்டை வெறுமனே ‘முதலீடு’ என்கிற நோக்கில் மட்டும் பார்க்கக் கூடாது. அதை விரிவான கண்ணோட்டத்தில் பார்ப்பது அவசியம்.

உலக முதலீட்டாளர் மாநாட்டின் வழியே அந்நிய முதலீடுகள் அதிகரிக்கும். அதன்வழியே உள்ளூர் பொருளாதார வளர்ச்சி (Local Economic Growth) மேம்படும். குறிப்பாக, தமிழ்நாட்டின் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கு இது வழி வகுப்பதோடு, தனிநபர் வருமானத்தையும் (Per Capita Income) அதிகரிக்கும். தனிநபர் வருமானம் உயர வேண்டுமானால் வேலை வாய்ப்பு தேவை. அதை அடைவதற்கான பல்வேறு வேலைகளை அளிக்கக்கூடிய நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அதிகரிக்க வேண்டும். அதற்கு இந்த உலக முதலீட்டாளர் மாநாடு பெரிய அளவில் உதவும். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம். தமிழ்நாட்டுக்குள் முதலீடுகள் வரும்போது, இயல்பாக உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படும். போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், சாலை, குடிநீர் உள்ளிட்டவை இன்னும் பரலாக, அதிகமாகக் கிடைக்கும்.

தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முன்னோடியாக விளங்கி வருகிறது. உதாரணத்துக்கு மின்சார வாகனங்கள், உலகளாவிய திறன் மையங்கள் (GCC - Global Capability Center), குறைகடத்திகள் (Semiconductors), மின்னணுச் சாதனங்கள் தயாரிப்பு, உணவுப் பதப்படுத்துதல், காலணித் தயாரிப்பு, ஆடை உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் அறிவுசார் பொருளாதாரம் (IT Knowledge economy), விண்வெளி (Aerospace), மூலதனப் பொருள்கள் (Capital Goods) உள்ளிட்ட துறைகளில் அளப்பரிய வளர்ச்சியைக் கண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. இந்தத் துறையில் அடைந்துள்ள மேம்பாடுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தெரிவிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் உலக முதலீட்டாளர் மாநாடு அமையும்.

**முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பு:** கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய பல்வேறு முதலீடுகள் அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. அவற்றை மீட்டெடுப்பதன் ஒரு பகுதியாகவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையிலும்,

உலக முதலீட்டாளர் மாநாடு அமையும். இம்மாநாட்டில் அறிவிக்கப்படவிருக்கும் கொள்கை சார்ந்த பல்வேறு முடிவுகள், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அமையும்.

உலக முதலீட்டாளர் மாநாட்டைப் பெரிய அளவில் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதால், இம்மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் மட்டுமின்றி, நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெரும் தொழில்முனைவோர், அறிவியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பல்வேறு நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், தொழில்முனைவில் ஆர்வம் காட்டும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்பார்கள். இவ்வாறு, ஓரிடத்தில் பல்வேறு ஆளுமைகளைக் கண்டு, உரையாடுவதற்கான ஒரு மிகப் பெரிய களமாகவும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு இருக்கும்.

**வளம் சேர்க்கும் வளம்:** அது மட்டுமின்றி, தமிழ்நாட்டில் உள்ள பிரபல பிராண்டுகளுக்குச் சர்வதேச அளவிலான கவனத்தை ஈர்க்கும் வகையில் இம்மாநாடு அமையும். அடுத்து, மாநாட்டில் பங்கெடுக்கும் முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்குப் பல்வேறு கேள்விகள், சந்தேகங்கள் இருக்கும். தமிழ்நாடுதான் தொழில் தொடங்குவதற்கான பல்வேறு சாத்தியங்களைக் கொண்டுள்ள மாநிலம். தொழிற்சாலைகளுக்கான இடம், சாலை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்டவை முன்னுரிமை அடிப்படையில் கிடைப்பது மட்டுமின்றி, அமைதியான (Social & Industrial Peace) சூழல் கொண்ட மாநிலமும் தமிழ்நாடுதான். இது குறித்துப் பலருக்கும் தெரியும். இதையும் தாண்டிப் பல்வேறு கேள்விகளுக்கான பதிலைப் பெறுகிற இடமாகவும் முதலீட்டாளர் மாநாடு அமையும்.

இறுதியாக, தமிழ்நாட்டில் இருக்கும் முக்கியமான வளங்களில் ஒன்று மனிதவளம். கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடுதான். முனைவர் பட்டம் முடித்த மாணவர்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம். அவர்கள் அதிக அளவிலான காப்புரிமையை (Patent) பதிவுசெய்துள்ளனர். இவ்வகையான மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் வகையிலும் உலக முதலீட்டாளர் மாநாடு அமையும் என்பதுதான் இதன் சிறப்பம்சம்.

**நன்றி: இந்து தமிழ்திசை**
**5.1.2024**

---

மேற்கு வங்க முதல்வர் - செல்வி மம்தா பானர்ஜி பிறந்த நாள்!

## “மக்களாட்சியின் மலர்ச்சிக்குப் பணியாற்றிடுவீர்!”

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜன. 6-

மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தியில்,

"இந்தியாவில் மக்களாட்சியின் மலர்ச்சிக்குப் பணியாற்றிடுவீர்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**மேற்கு வங்க முதலமைச்சரும் எனது அன்பிற்கினிய சகோதரியுமான செல்வி மம்தா பானர்ஜி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**நல்ல உடல்நலனும், மகிழ்ச்சியும், வெற்றிப்படிகளும் நிறைந்து, இந்தியாவில் மக்களாட்சியின் மலர்ச்சிக்குப் பங்காற்றிடும் வகையில் இந்த ஆண்டு தங்களுக்கு அமைந்திட விழைகிறேன்.**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த வரலாறு காணாத கனமழையால் பாதிக்கப்பட்ட திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கால்வாய், கிளாக்குளம், தாதன்குளம், கருங்குளம், ஆழ்வார்கற்குளம் ஆகிய பகுதிகளை நேற்று முன்தினம் (04.01.2024) வியாழக்கிழமை, திமுக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டு, அப்பகுதி மக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். உடன், சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர் இசக்கிபாண்டியன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!

---

கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கு: திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு! ஆர்.எஸ்.பாரதி தலைமை!

## கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜன. 6 -

கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நமது நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் ஜனவரி 10 மாலை 3 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா “சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்” எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 10 புதன்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் ராயப்பேட்டை ஒய் எம் சி ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணி தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி.,

வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி. ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதி இளம்சுருதி எம்.சி., முத்துவேல்.ராமசாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபுவின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூவாளூர் சின்னதுரை
### சனவரி 6 (2014)



**தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவர், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவர், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.**

**திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.**

**1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘இந்தியா’ கூட்டணி வெற்றி! வரலாற்றுக் கட்டாயமாகும்!!

31.12.2023ஆம் தேதியிட்ட ஆங்கில இந்து ஏட்டின் 27ஆம் பக்கத்தில் வர்கீஸ் கே.ஜார்ஜ் என்ற பத்திரிக்கையாளர் ஒரு முக்கியமான செய்திக் குறிப்பை வழங்கியுள்ளார். ‘இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேர்தல்கள் நடைபெறவுள்ள இந்த ஆண்டு எப்படியிருக்கும்? என்ற கேள்விக்குறியோடு, பழமையானதும் மிகப்பெரியதுமான ஜனநாயக நாடுகளின் தேர்தல்கள் என்பதால் உலக நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வத்தோடும், அக்கறையோடும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்’ என்ற தலைப்பிட்டு வெளியிட்டுள்ளார்கள் (How is the poll year shaping up for India, U.S? why will the world watch elections in the largest and oldest democracies with interest and concern)

செய்தியாளர் வர்கீஸ் கே.ஜார்ஜ், உலக மக்களின் மத்தியில், இந்த இரண்டு நாட்டு தேர்தல்கள் கவனத்தையும், ஆர்வத்தையும் பெரிதும் ஈர்ப்பதற்கான காரணத்தையும் விவரிக்கிறார்.

இந்தியாவும் அமெரிக்காவும் உலக நாடுகளின் ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அமல்படுத்தி வருகின்ற மிகப்பெரியதும், பழமையானதுமான நாடுகளாகும்! அமெரிக்க நாட்டின் ஜனநாயகத்தில் “ஜனாதிபதிஆட்சிமுறை” ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாறாக இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயக முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு, தொடர்ந்து அமல்படுத்தப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியின் அரசியல் அதிகாரம் தனித்துவம் வாய்ந்தது, அந்த நாட்டின் மக்கள்பிரதிநிதித்துவ மன்றங்களான மக்கள் பிரதிநிதித்துவசபை (House of Representatives of the People) மற்றும் மேல்சபை (Senate) ஆகிய மன்றங்களின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவியலாது. ஆனால் இந்திய ஒன்றியத்தில், நாடாளுமன்றத்தின் எண்ணிக்கை பலத்தால் பிரதம அமைச்சரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவும் முடியும், பிரதமரை அப்புறப்படுத்தவும் முடியும் என்ற விவரங்களையெல்லாம் செய்தியாளர் விளக்கியுள்ளார்.



**பொன். முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர் -
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

பாரதீய ஜனதாக்கட்சியின் பலம் எந்தெந்த மாநிலங்களில் உள்ளது என்றும் எந்தெந்த மாநிலங்களில் பலவீனமாக உள்ளது என்பதையும் விளக்கி விட்டு, பாரதீய ஜனதாக் கட்சின் ஆழமான எதிர்புணர்விற்கு அச்சாணியாக கருதப்படுவது எதுவென செய்தியாளர் குறிப்பிடுவது, கல்வி, பொதுச்சுகாதாரம், இந்துமத நடைமுறைகள் ஆகும். இந்தத் துறைகள்சார்ந்த அதிகாரங்களை மத்தியில் உள்ள ஒன்றிய அரசின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரும் முயற்சியும் அதனையொட்டிய தொடர் நடவடிக்கைகளும் ஆகுமெனக் குறிப்பிடுகிறார். (Several states in India find the BJP policies with regard to education, health, and the role of the Hindu religion disturbingly centralising)

செய்தியாளர் குறிப்பிடும் கல்வி, பொதுச்சுகாதாரம் ஆகிய துறை சார்ந்த அதிகாரங்களைக் கைப்பற்றும் முயற்சியில் ஒன்றிய அரசு தொடர்ந்து பல்வேறு முரட்டுத்தனமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மக்கள் நேரடியாகவே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதன் தாக்கத்தையும், விளைவுகளையும் எதிர்கொண்டும் வருகிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் (Preamble of the constitution) மதச்சார்பற்ற ஆட்சிமுறையை (Secularism) வலியுறுத்துகிறது. ஆனால் இன்றுள்ள பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சி இந்துமதக் கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்து ராஷ்ட்ரத்தை” உருவாக்கத் திட்டமிட்டு, தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே மதச்சார்பற்ற ஆட்சிமுறை தான் இந்தியாவிற்கு பொருத்தமான ஆட்சிமுறை என்பதோடு, கடந்த 73 ஆண்டுகாலமாக இந்த மதச்சார்பற்ற ஆட்சிமுறைதான் நாட்டு மக்களின் அமைதியையும், ஒற்றுமையையும் உறுதிப்படுத்தியிருக்கிறது என்பதை நிதர்சனமாகப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள், “இந்து ராஷ்ட்ரா” மதவாதக்கட்டமைப்பை நிச்சயமாக மக்கள், நாட்டின் பன்முகத்தன்மை கருதி ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிஞ்சிற்றும் இருக்கவியலாது.

இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், இங்கு வாழும் மக்களின் வாழ்வியல் முறைக்கும் மதச்சார்பற்ற ஆட்சிமுறையே ஆகச்சிறந்தஆட்சிமுறையாக இருக்க வேண்டுமென்று தான் இந்திய நாட்டின் ஒற்றுமையில் அக்கறை கொண்ட அகில இந்திய அளவிலான அனைத்துத்தரப்பு மக்களும் கருதுகிறார்கள். “இந்து ராஷ்ட்ரத்தாலே”, மக்களின் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்யவியலாது, மாறாக, பெரும்பான்மைசிறுபான்மை என்ற பெரும் பிளவுகளை மக்களிடையே உருவாக்கும். “சமுக நீதி” (Social Justice) என்ற கோட்பாட்டால் மட்டும் தான் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிளவையும் சமன் செய்ய முடியும், ஏற்றத்தாழ்வு என்கிற நிலை சமுகபொருளாதாரஅரசியல் களங்களில் சமன்படுத்தப்பட்டு, “சகோதரத்துவம்” தழைத்தோங்கிட வழிவகுக்கும்.

எனவேதான் தமிழ் நாட்டில், திராவிடமாடல் ஆட்சியினைத் திறம்பட செயல்படுத்திக்கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர் “சமுக நீதி” என்ற கோட்பாட்டின் ஆக்கப்பூர்வமான பயன்களை, இந்தியா (INDIA) கூட்டணியின் மூலம் அனைத்து மக்களின் மனங்களில் ஆழமாக பதிய வைத்து வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல பன்முகத்தன்மை கொண்ட இந்திய நாட்டின் ஒற்றுமையை பலப்படுத்தி நிரந்தரப்படுத்தும் சக்தியும் ஆற்றலும், சமுக நீதிக்கு உண்டா அல்லது இந்துத்துவக் கோட்பாட்டிற்கு உண்டா என்றால், எந்த ஒரு இந்தியக் குடிமகனும் வேறுபாடுகளை மறந்து விட்டு சமூக நீதியைத்தான் தேர்ந்தெடுப்பான் என்ற நிலை அகில இந்தியா முழுமையும் உள்ள மக்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளால் அறிய முடிகிறது.

அதுமட்டுமல்ல அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய “சமூகநீதிக் கோட்பாட்டின் முன்னர், வரும் நாடாளுமன்றத்தேர்தல் களத்தில் இந்துத்துவக் கோட்பாடு” மக்கள் மத்தியில் சிக்கிச் சிதறுண்டு போகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அனைத்து மக்களின் ஒற்றுமையே இந்திய நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றும் என்பதை நாட்டு மக்களும் உணரத் தொடங்கி விட்டனர்.

இந்திய ஒன்றிய ஆட்சிமுறையில் நாடாளுமன்றத்தில் உள்ள எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில் தான் பிரதம அமைச்சர் தன் பதவியில் தொடர முடியும். எனவே இந்திய ஒன்றியத்தில் நாடாளுமன்றமே அதிகார மையமாகக் கருதப்படும். இத்தகைய நிலைமை அமெரிக்காவில் இல்லை. அங்கு ஜனாதிபதி பொறுப்பு என்பது மக்கள் பிரதிநிதித்துவ சபைகளின் எண்ணிக்கை பலத்தைப் பொறுத்து மாறக்கூடியது அல்ல. உச்சபட்ச அதிகாரத்தை அரசியல் சட்ட அடிப்படையில் பெற்ற நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள், படிப்படியாக பிரதமரின் கரங்களுக்கு மாறுவதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகவே தொடங்கி விட்டன. (In India, PM’s control over Parliament has grown in the recent past with the BJP winning absolute majorities in 2014 and 2019)

இந்த வெளிப்பாட்டின் ஒரு கட்டமாகத்தான் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்து விட்டு, மிக முக்கியமான இந்திய நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சட்டங்களை, எந்தவிதமான விவாதங்களுமின்றி நிறைவேற்றி இருக்கிறார்கள். இந்த முறை ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநித்துவ மன்றமான நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும், உரிமையையும், ஆட்சிக்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி ஆக்கிரமித்துக் கொண்டதாகத்தான் கருத முடியும். அதுமட்டுமல்ல நாடாளுமன்ற ஜனநாயகத்தை மாற்றி ஜனாதிபதி ஆட்சிமுறையை (Presidential form of Government) கொண்டுவருவதற்கான வெள்ளோட்டமாகத்தான் இந்த நடவடிக்கையை அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான், 2024ஆம் ஆண்டு, இந்திய ஒன்றியத்திற்கான நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. இந்தத் தேர்தலில் “இந்தியா” (INDIA) தேர்தல் கூட்டணித் தலைவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் டாக்டர். பாபா சாகிப் அம்பேத்கரும் மற்றும் பல தேசியத் தலைவர்களும், சட்ட வல்லுநர்களும் தீர்க்கமாகச் சிந்தித்து உருவாக்கி வழங்கியுள்ள நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பெரும் முயற்சியில் ஈடுபடவுள்ளார்கள். இந்திய அரசியல் சட்டமே மக்களால் உருவாக்கப்பட்ட சட்டம் தான் என்பது அரசியல் சட்டத்தின் முகவுரையிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் பாதுகாக்கப் பட வேண்டுமானால், “இந்தியா” (INDIA) தேர்தல் கூட்டணி வெற்றிபெற்றே தீரவேண்டும் என்ற திடமான எண்ணமும் சிந்தனையும் மக்கள் மத்தியில் வேகமாகவே உருவாகிக் கொண்டிருக்கிறது.

இந்திய நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் “இந்துத்துவக் கோட்பாட்டை” அறவே அப்புறப்படுத்தி விட்டு சமூக நீதிக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்தி இந்திய நாட்டின் பன்முகத் தன்மையையும், ஒற்றுமையையும் காப்பாற்றுவதன் மூலம் பன்முகத்தன்மை கொண்ட, பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய வரலாற்று ஆசிரியர்களால் துணைக் கண்டமென வரையறுக்கப்பட்ட இந்தியாவில், ஜனநாயகம், மதச்சார்பற்ற கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும், “சமூக நீதி” என்கின்ற திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை அம்சமான அனைத்து மக்களையும் அன்போடு அரவணைத்துச் செல்லும் அறவழிக் கோட்பாட்டின் வழியிலும், மதவாத சக்திகளையும், அதிகாரங்களை ஒன்றுதிரட்டி, ஓரிடத்தில் குவித்து ஜனநாயகத்தில் ஓர் சர்வாதிகாரத்தை உருவாக்கும் திட்டத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியை அப்புறப்படுத்திவிட்டு, இந்திய அரசியல் சட்டத்தையும், இந்திய நாட்டின் ஒற்றுமையையும் உறுதிப்படுத்தி ஜனநாயக நாடாளுமன்ற ஆட்சிமுறையைப் பாதுகாக்க தீர்க்கமான கொள்கைகளுடன் மக்களைச் சந்திக்கும் ‘இந்தியா’ கூட்டணி தடைகளைத் தகர்த்து, நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியினை ஈட்டும் என்பதில் ஐயமில்லை.




சென்னை, தீவுத்திடலில் 48 – வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023 – 2024 நடைபெற உள்ளதையொட்டி அரசுத் துறைகளின் அரங்கங்கள் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### மயிலாடுதுறையை பாதிக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அரசிதழில் வெளியீடு!

## மாவட்ட மக்களுக்கு முதல்வர் தந்த மதிப்புமிக்க பொங்கல் பரிசு!

### கழக விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெகவீரபாண்டியன் நன்றி தெரிவித்து அறிக்கை!

மயிலாடுதுறை, ஜன. 6-

மயிலாடுதுறையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அரசிதழில் வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெக வீரபாண்டியன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சோழமண்டலத்தில் மயிலாடுதுறை மாவட்டம் எத்தனையோ மகத்துவங்களை பெற்றிருக்கிறது. அரசியல், ஆன்மீகம், கல்வி, வரலாற்று முக்கியத்துவம் இப்படி எந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும் மயிலாடுதுறை மாவட்டம் தமிழகத்தில் தனித்து அடையாளப்படுத்தப்படும்.

இவை எல்லாவற்றிலும் கூடுதல் சிறப்பு இதன் மாறாத பசுமை. நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடி செழிப்போடு விளங்க செய்திடும் காவிரி, இங்குதான் கலைஞரால் மதிப்பு கூட்டப்பட்ட பூம்புகாரில் (காவிரிபூம்பட்டினத்தில்) மகிழ்வோடு வங்கக்கடலில் சங்கமிக்கிறது.

இது நிலைக்கப்பட வேண்டுமேயானால், இம்மாவட்டம் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். அதை முதல்வர் அவர்கள் உறுதிப்படுத்தும் விதமாக சென்ற கூட்டத் தொடரில் மசோதாவை நிறைவேற்றினார்.

இன்று தமிழக அரசின் அரசு இதழில் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதை தமிழக அரசின் சட்டத்துறை செயலாளர் ஜார்ஜ் அலெக்சாண்டர் அவர்கள் அதற்கான தமிழக ஆளுநர் ஒப்புதலை பெற்று அந்த நல்ல அறிவிப்பை அறிவித்துள்ளார்.

தமிழக விவசாயிகள் மீதும் விவசாயத் தொழிலாளர்கள் மீதும் அதிக அக்கறை கொண்டுள்ள திராவிட மாடல் அரசின் முதல்வர், மயிலாடுதுறை மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் வயிற்றில் பாலை வார்த்துள்ளார்.

விவசாயிகள் மட்டற்ற மகிழ்ச்சியில் உள்ளனர். தன்னுடைய விளை நிலங்கள் எதிர்காலத்தில் எந்த பாதிப்புகளுக்கும் உள்ளாகாமல் பாதுகாக்கப்படும் என்று நம்பிக் கையோடு உள்ளார்கள்.

இவ்வாறு கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர், ஜெகவீர பாண்டியன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினருமான ரெ. தங்கத்திடம், ஆர்.சீனிவாசன் என்ற மாற்றுத்திறனாளி தமக்கு சுயதொழில் செய்ய உதவிடுமாறு வைத்த கோரிக்கையை ஏற்று, அவருக்கு சங்கம் சார்பில் புதிய ஆட்டோரிக் ஷாவை வழங்கி ரெ.தங்கம் ஊக்கப்படுத்தினார். மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், சங்க மக்கள் தொடர்பு அலுவலர் தி.நகர் லயன் பா.சக்திவேல், வீர.சரவணன், தென்சென்னை மாவட்ட சங்க செயலாளர் கி.பத்மநாபன், வடசென்னை மாவட்ட சங்க செயலாளர் எஸ்.தர்மலிங்கம், துணை செயலாளர் எஸ்.ஸ்டீபன்,மகளிர் அணி நிர்வாகிகள் டி.குமாரி, எஸ்.பச்சையம்மாள், கே.சித்ரா,எஸ்.தேவி ஆகியோர் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நெல்லை புகாரி**
**சனவரி 6 (1999)**



கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.

கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

“சிறுபான்மையினரான இசுலாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்” என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 18 கோடியே 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹைதீன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வி. அப்துல் வஹாப், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முகமது அபுபக்கர், தமிழ்நாடு வக்ஃப் போர்டு தலைவர் எம். அப்துல் ரகுமான், இளைஞர் அணி தலைவர் முனவர் அலி, மாணவர் அணி தேசிய தலைவர் முகமது அர்சத் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

### நகரங்களுக்கு இணையாக

# கிராமங்களை முன்னேற்றுவதே திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம்!

## அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜன. 6-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் வேம்பபத்தூரில் ரூபாய் 25 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பிலான புதிய ஊராட்சி மன்ற கட்டிட திறப்பு விழா மாவட்ட ஆட்சியர்திருமதி ஆஷாஅஜித் தலைமையில் வேம்பத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் வி.எம். சமயமுத்து முன்னிலையில் நடைபெற்றது. திட்ட அலுவலர் ராம.சிவராமன் வரவேற்றுப் பேசினார் . இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசியதாவது.

நகர் பகுதிகளுக்கு இணையாக கிராமப்புறங்களை மேம்பாடுஅடைய செய்ய வேண்டும் என்பதே திராவிடமாடல் நாயகர் முதல்வர் தளபதி அவர்களின் நோக்கம்ஆகும். இதற்கான முயற்சிகளை திராவிட மாடல் நாயகர் நம்முடைய முதல்வர் தளபதி அவர்கள் திட்டங்களை தீட்டி செயல் படுத்தி வருகிறார். கிராம வளர்ச்சியில் அக்கறை உள்ள முதல்வர் ஆட்சி நடைபெற்று வருகின்றது. விரைவில் இங்கு அண்ணா மறு மலர்ச்சி திட்டம் ரூபாய் 40 லட்சத்தில் மேற்கொள்ளப் பட உள்ளது. இங்கு சுய மகளிர் குழுக்கான தொழிற்பயிற்சி கூடம் ரூபாய் 10 லட்சத்தில் கட்டடப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சிக்கு வருவாய் வரி மிகவும் குறைவான தாகும். ஆனால் அரசின் சார்பில் இன்று பல கோடி ரூபாய்க்கு திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது.

இதனால் ஊராட்சிக்கு புதிய சொத்து உருவாக்கப் பட் டுள்ளது. நகரங்களுக்கு மக்கள் குடியேற்றுவதை தடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் கிராமங்கள் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையிலும் முதல்வர் அவர்கள் இத்தகைய பல்வேறு திட்டங்களான சாலை வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று திட்ட மிட்டு அதற்கான நிதிகளை ஒதுக்கி பணிகளும் நடைபெற்று வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் இத்தகைய திட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை. திராவிட மாடல்ஆட்சியின் கதாநாயகர் முதல்வர் அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல். தமிழகம் முழுவதிலும் இத்தகைய திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை கிராமப்புற மக்கள் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். கிராமப்புற சொத்துக்களை மக்கள் பாதுகாக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை வாழ்த்துரை வழங்கினார். ஒன்றிய ஆணையாளர் ஜோசப் நன்றி கூறினார்.

இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன்கென்னடி, திருப்புவனம் பேருராட்சி மன்றதலைவர் த.சேங்கை மாறன், ஒன்றிய துணைத் தலைவர் முத்துச்சாமி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்ட மகளிரணி சார்பில் – கழக துணைப் பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை அன்னை முதியோர் இல்லத்தில் மாவட்ட மகளிரணித் தலைவர் திருமதி எஸ். மணிமேகலை தலைமையில் – மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதிபவானிகணேசன் முன்னிலையில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர் மற்றும் மார்கரெட் கமலா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



புதுடெல்லியில் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல்காந்தி அவர்களை அவரது இல்லத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேசினார். அப்போது திருமதி. சோனியாகாந்தி அவர்களின் உடல் நலம் குறித்து ராகுல்காந்தியிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விசாரித்து அறிந்தார். இச்சந்திப்பின் போது ராகுல்காந்தி அவர்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மழை வெள்ளசேதம் குறித்து கேட்டறிந்தார். இருவரும் இந்திய தேசத்தின் மதச்சார்பற்ற நெறிமுறைகளைப் பாதுகாப்பதற்கான இந்தியா கூட்டணியின் முன்னேற்றம் குறித்து அளவளாவினர்.

### தயாநிதி மாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு:

# சேப்பாக்கம் பகுதி சார்பில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நல உதவிகள் வழங்கி சிறப்புரை!

சென்னை, ஜன.6-

இந்நிகழ்ச்சி குறித்து சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளரும், 9-வது மண்டலக் குழுத் தலைவருமான எஸ். மதன்மோகன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சேப்பாக்கம் பகுதி தி.மு.க சார்பில் வரும் 6.1.2024 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பாக முகவர்கள் (BLA2), பாக உறுப்பினர்கள் (BLC) மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் வட்டக் கழக செயலாளர்கள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மகளிர் அணியினர், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் குறிப்பாக அனைத்து வட்டங்களின் பாக முகவர்கள் மற்றும் பாக பொறுப்பாளர்களும் பெரும் திரளாக பங்கேற்குமாறு எஸ்.மதன் மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# உடன்பிறப்பே... 39

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த வி.எம்.தேவராஜ் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## வி.எம்.தேவராஜ்: படை முகத்துப் பெருவீரன்!



ஓவியம் : ரவி பேலட்

கோட்டை நகரமாம் வேலூரரை சிப்பாய்க் கலகப் புரட்சியின் மையமாக வரலாறு குறித்து வைத்துள்ளது. அதேபோல சுதந்திரத்துக்குப் பிந்தைய ஜனநாயக ஆட்சியில், வேலூர் மண்டலம் ‘தி.மு.கழகத்தின் கோட்டை’ என்பதையும் வரலாறு எழுதுகிறது.

தமிழ்நாட்டில் முதன்முதலில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் அண்ணா தொடங்கி வைத்த போர்முழக்கம் ‘இன்று வேலூர் கோட்டை, நாளை செயின்ட் ஜார்ஜ் கோட்டை’ என்றுதான். அந்தப் பொதுக்கூட்டம், வேலூர் கோட்டை மைதானத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் முழக்கத்தை கர்ஜனை செய்த வேலூர் கழகச் சிப்பாய்களில் ஒருவர் வி.எம். தேவராஜ். கலைஞரின் சொற்களிலேயே சொல்வதெனில் ‘படை முகத்துப் பெருவீரன்’ வி.எம்.தேவராஜ்.

### தோழமையான அணுகுமுறை

வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை என்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, ‘சாரதியையும் தேவராஜனையும் கேளுங்கள்’ என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டினார். சற்றேறக்குறைய பேரறிஞர் அண்ணா பிறந்து 11 ஆண்டுகளுக்குப் பின்னால், 1920 ஆம் ஆண்டு ஜுன் 7 ஆம் தேதி பிறந்தவர். எனினும், அண்ணாவுக்கும், தேவராஜ் அவர்களுக்கும் தோழமையான அணுகுமுறை நிலவியதை காலம் குறித்து வைத்திருக்கிறது.

தொடக்கக் கால பள்ளிக்கல்வியுடன் திராவிட இயக்கத்தின் அரசியலும் சேர்ந்து கொண்டதால், தேவராஜ் வேலூர் வட்டாரத்தில் திராவிடக் கொள்கைகளைப் பேசும் தளபதியாக அறியப்படலானார். தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்றுப் பெரும் படை திரண்ட போது, அதில் வேலூரின் முகமாக சாரதியும் தேவராஜும் இருந்தனர். கழகத்தவரை அரவணைப்பதில் சாரதியிடம் ஒரு பண்பு என்றால், அவரைப் போலவே தேவராஜும் வேலூர் கழகத்தில் அன்பு பாராட்டியவர். ஆஜானுபாகுவான தோற்றம் என்றாலும் அமைதி, எளிமை, நிதானமான அணுகுமுறையே அவரின் அடையாளம் என வேலூர் கழகத்தினர் நினைவு கூர்கின்றனர். பேரறிஞர் அண்ணா தேவராஜை சுருக்கமாகத் ‘தேவ் ! தேவ் !’ என்று அழைப்பார் என்கிறார்கள். கிட்டத்தட்ட வேலூர் சுற்றுவட்டாரங்களில் கழக உடன்பிறப்புகளாலும், வேலூர் மக்களாலும் ‘தேவ்’ என்று அவர் அழைக்கப்பட்டார்.

### தி.மு.க.வின் கோட்டை

தி.மு.க.வின் கோட்டையாக இருந்த வேலூரில் இருந்து தொடர்ச்சியாக சாரதி வெற்றி பெற்றார் என்றால், அவருக்குப் பின்னர் தேவராஜ் அந்த செல்வாக்கைத் தக்க வைத்தவராகத் திகழ்ந்தார். சுமார் 36 ஆண்டுகள் வேலூர் நகர்மன்ற உறுப்பினராக தேவராஜ் இருந்தார். தவிர, சாரதிக்குப் பின்னர் நகர மன்றத் தலைவராகவும் ஒருமுறை செயல்பட்டவர்.

இவர் நகர மன்றத் தலைவராக இருந்தபோது, ‘நகர மன்ற அலுவலகத்தில் அவர் இருக்கிறாரா இல்லையா என்பதை அவரது குடை சொல்லிவிடும்’ என்பார்கள். எளிமையாக ஆட்டோவில் தான் வருவார்.சமயங்களில் மக்களோடு மக்களாகக் கையில் குடை பிடித்துக் கொண்டு சாதாரணமாக நடந்து செல்வதைப் பார்க்கலாம். அந்தக் குடையை அலுவலக வாசலில் மாட்டிவிட்டு அவர் வேலை பார்த்துக் கொண்டிருப்பார். அந்தக் குடை அங்கு இருந்தால், மக்கள் கூட்டமும் குறைகளுடன் அங்கு குழுமிவிடும்.

நகர மன்றத் தலைவர் பொறுப்புக்குப் பின்னர், 1980, 1984, 1989 ஆம் ஆண்டுகளில் வேலூர் கோட்டையில் இருந்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குத் தேர்வாகி வந்து கலைஞரின் கரங்களை வலுப்படுத்தியவர் தேவராஜ்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையை ஏற்றதும், கழகத்தைக் கட்டுக்கோப்பாக வைக்கவும் தேவராஜ் போன்றவர்கள் கடைசிவரை கலைஞருக்குத் துணை நின்றனர். 1972 ஆம் ஆண்டில் கழகம் உட்கட்சி நெருக்கடியைச் சந்தித்தபோது தேவராஜன் ‘சாய்ந்து’ விடுவார் என்று ஒரு பரபரப்பு கிளப்பப்பட்டது.

### எம்.ஜி.ஆருடன் சிலம்பம்

அதற்குக் காரணம், தேவராஜ் சிலம்பம் ஆடுபவர். வேலூரில் கழக நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆர். வந்தால், அவரை வைத்து ஒரு சிலம்ப நிகழ்ச்சியைக் காலையிலேயே கழகத் தொண்டர்கள் நடத்துவார்கள். அப்போது எம்.ஜி.ஆர். உடன் சிலம்பம் சுற்றுபவராக தேவராஜ் இருந்தார். அதனால் எம்.ஜி.ஆருக்கு நெருக்கம் என்று பேச்சு கிளப்பப்பட்டது. ஆனால், ‘நான் கழகத்தின் விசுவாசி, அண்ணாவின் தம்பி, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு’ எனக் கலங்காமல் கழகம் காத்தவர் தேவராஜ். அவரது கழகப் பிடிப்பினைப் போற்றும் வகையில் அவர் எம்.எல்.ஏ. ஆவதற்கு முன்னர், சட்டமேலவை உறுப்பினராக்கிப் பெருமை சேர்த்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.

> **கொள்கைப் பிடிப்போடு யார் யார் இருக்கிறார்கள் என கழகத்தினர் சோதித்துக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அந்த நாட்களிலும் தேவராஜ் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவராக இருந்தார்.**

நெருக்கடி கால மிசா கொடுமையேற்று ஓராண்டு சிறையில் அடைப்பட்டிருந்தார். அவர் மற்றும் அவருடன் அடைக்கப்பட்டு இருந்த கழகத் தோழர்கள் ஐந்து பேர் திடீரென கடலூருக்கு மாற்றப்பட்டனர். கடலூர் சிறையில் கழகத்தின் புரட்சி முழக்கம் கிளம்பியதும் மீண்டும் வேலூருக்கே மாற்றப்பட்டார். விலைவாசி உயர்வுப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் எனக் கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களிலும் இந்த வேலூர் சிங்கம் முதல் ஆளாக முன் நின்றதை, இன்றைக்கும் வேலூர் கழக நிர்வாகிகள் கழக உணர்வுடன் நினைவுகூர்கின்றனர்.

### உட்கட்சி குழப்பம்

1993 ஆம் ஆண்டில் மீண்டும் கழகத்தில் உட்கட்சிக் குழப்பம் நீடித்த போதும் தேவராஜ் பெயர் அடிபட்டது. அப்போது யார் பெயர்தான் அடிபடவில்லை? கொள்கைப் பிடிப்போடு யார் யார் இருக்கிறார்கள் என கழகத்தினர் சோதித்துக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அந்த நாட்களிலும் தேவராஜ் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவராக இருந்தார்.

கழகத்தின் பல்வேறு படிநிலைகளில் பொறுப்பு வகித்த தேவராஜ் அவர்கள் வேலூர் மாவட்ட அவைத் தலைவராகவும் கழகத்தை வழி நடத்தினார். வயது மூப்பின் காரணமாக 1998 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 11 ஆம் தேதி இந்த வேலூர் சிங்கம் தனது இறுதி சுவாசத்தை நிறுத்திக் கொண்டது.

### வேலூர் வேங்கை

வேதனை நிரம்ப, அப்போது கலைஞர் ஒரு கடிதம் எழுதினார். “வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை என்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, சாரதியையும், தேவராஜனையும் கேளுங்கள்” என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டிய அந்த நாள் முதல் வி.எம்.தேவராஜை அறிவேன். ‘அந்தப் படைமுகத்துப் பெருவீரன்’ பங்கேற்காத அறப்போர்க்களம் எதுவுமில்லை. அந்த வேலூர் வேங்கை விடைபெற்றுக் கொண்டதை எண்ணி விழிநீர் பெருக்காதார் அந்த வட்டாரத்தில் யாருமில்லை" என்று அந்த இரங்கல் உரையில், தனது விழி நீரையும் இறக்கி வைத்தார் கலைஞர்.

வேலூர் கோட்டை இன்றைக்கும் கழகக் கோட்டைதான். அரசியல் அறிந்தோர் யாரும் அதை மறுக்க முடியாது. அப்படியான கழகக் கோட்டையின் அடிச் செங்கல்லாக தேவராஜ் போன்றோர் திகழ்ந்ததையும் கழகத்தினர் மறக்க முடியாது.

...துடிக்கும்

## புத்தகக் காட்சியில் அறநிலையத்துறை!



‘திராவிட மாடல்’ ஆட்சியில் கோயில் சொத்துகளை மீட்டெடுத்தல், குடமுழுக்கு நடத்துதல், கோயில்களைப் புனரமைத்தல், அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குதல், அன்னைத் தமிழில் அர்ச்சனை என இந்து சமய அறநிலையத்துறை தினம் தினம் புதுப்புது வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 அரிய பக்தி நூல்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு, கடந்த ஆண்டு ஜனவரி 19 ஆம் தேதி முதலமைச்சர் வெளியிட்டார். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் புத்தக விற்பனை நிலையமும் திறக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு சென்னை புத்தகக் காட்சியிலும் இந்து சமய அறநிலையத்துறை தனி அரங்கம் அமைத்து, ‘தேவாரம்’, ‘திருவாசகம்’, ‘திருப்புகழ்’, ‘திருப்பாவை’, ‘திருவெம்பாவை’, ‘அபிராமி அந்தாதி’, ‘நாலாயிர திவ்யபிரபந்தம்’, ‘தமிழகக் கலைகள்’, ‘சைவமும் தமிழும்’, ‘இந்தியக் கட்டடக் கலை வரலாறு’, ‘அவ்வையார் வரலாறு’, ‘பதினெண் புராணங்கள்’, ‘சிற்பக் கலை நூல்கள்’ உள்ளிட்ட 108 அரிய நூல்களை விற்பனைக்கு வைத்துள்ளது. அரங்கின் வடிவமைப்பும் நூல்களும் புத்தகக் காட்சிக்கு வரும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

## :ப்ளாஷ்பேக்







கோவி.லெனின்

### சந்திப்புக்காக இதழ்!

2004 ஆம் ஆண்டு ஜனவரியில், புத்தாண்டை முன்னிட்டு ‘தமிழ் அணு’ என்று தலைப்பிட்ட 16 பக்க குறுஇதழை ‘துளி தீ போதும் இருள் எரிக்க’ என்ற அடைமொழியுடன் வெளியிட்டேன். அந்த முயற்சியைப் பாராட்டி முத்தமிழறிஞர் கலைஞர் ‘முரசொலி’ உடன்பிறப்புக் கடிதத்தில் என் பெயரையும் குறு இதழையும் குறிப்பிட்டு அரைப் பக்கத்துக்கு எழுதி இருந்தார். நன்றி தெரிவிப்பதற்காக ‘முரசொலி’ அலுவலகத்தில் தலைவர் கலைஞரைச் சந்தித்தேன். ஏற்கெனவே, 1996 ஆம் ஆண்டு அவருடைய அணிந்துரையுடன் வெளியாகியிருந்தது என் முதல் கவிதை நூல். அதனை நினைவுபடுத்தி அவரிடம் வழங்கினேன். மாதந்தோறும் ‘தமிழ் அணு’ குறுஇதழ் அச்சானதும் கலைஞரை நேரில் சந்தித்து வழங்குவேன். அவர் அன்புடன் உரையாடுவார். அதற்காகவே, அவ்விதழை நடத்திய நினைவுகள் இன்றைக்கும் மனதை விட்டு அகலாதவை.

**-கோவி.லெனின், தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகள்!

**1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி சேலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கலைஞர், அதிசயிக்கத் தக்க வகையில், ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த வீரபாண்டி ஆறுமுகம், கலைஞரின் அன்றைய சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார். இறுதியாக செவ்வாப்பேட்டைப் பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய நாள் முழுவதும் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகளில் கிடைத்த, 15 ஆயிரம் ரூபாயை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 351




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.